# உதயன்

சுடர் : 36 | கதிர் : 218 | வெள்ளிக்கிழமை | ஆனி 18 ஆம் நாள் 02 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## கொரோனா சாவு 43

கொழும்பு, ஜூலை 2
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மேலும் 43 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தக

19 ➤

## யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு பலி

யாழ்ப்பாணம், ஜூலை 2
கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் நேற்று உயிரிழந்தார். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை

19 ➤

## கொரோனா 1,815

கொழும்பு, ஜூலை 2
நாட்டில் நேற்றும் 1,815 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில்

19 ➤

### துமிந்த விடுதலை விவகாரம்

# யாரை விடுவிக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும்!

### என்னை சவாலுக்கு உட்படுத்த முடியாது ஜனாதிபதி கோத்தாபய கொதிப்பு



கொழும்பு, ஜூலை 2
யாருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும், யாருக்கு பொதுமன்னிப்பு வழங்கக்கூடாது என எனக்குத் தெரியும். எனக்கு எவரும் வகுப்பு எடுக்கத் தேவையில்லை. எனது அதிகாரத்தை எவரும் சவாலுக்குட்படுத்தவும் முடியாது இவ்வாறு சீற்றத்துடன் தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

19 ➤



## புதிய வைரஸ் திரிபுகளால் இலங்கைக்கும் பேராபத்து!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று பகிரங்க எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 2
இந்தியாவில் புதிய வைரஸ் திரிபு கண்டறியப்பட்டு சில மாதங்களின் பின்னரே அங்கு பெரும் அவலநிலை ஏற்பட்டது. அதே போன்று இலங்கையிலும் புதிய வைரஸ் திரிபுகள் இப்போதுதான் அடையாளம் காணப்படுவதால் இன்

19 ➤

## அரசின் அசமந்தத்தால் டெல்டா தீவிரமாகலாம்

### மற்றுமொரு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 2
அரசின் அசமந்தப்போக்கால் 'டெல்டா' வைரஸ் தொற்றுப் பரவல் இலங்கையை பேராபத்தான நிலைக்குத் தள்ளும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கை விடுத்தார். டெல்டா தொடர்பான போதிய புரிதலின்றியேகொரோனா

19 ➤

## மடுப்பெருவிழா இன்று

இலங்கையில் உள்ள மிக முக்கிய கத்தோலிக்க வழிபாட்டுத் தலமான மடுத் திருப்பதியின் திருவிழாத் திருப்பலி இன்று காலை 6.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. வழக்கம்போல தமிழ், சிங்கள மொழிகளில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும் திருவிழாத் திருப்பலியில் வேறு மறைமாவட்ட ஆயர்களும் பங்கெடுக்கின்றனர். (விரிவு பக். 4)

## குடாநாட்டில் பாண் விலை அதிகரிக்காது



யாழ்ப்பாணம், ஜூலை 2
தெற்கில் பாணின் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான அதிகரிப்பு எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் க.பாஸ்கரன்

19 ➤

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு அரசியல் பின்புலமே காரணம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
தற்போதைய இடர் நிலைமையில் சில தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. அவை நிறைவேற்ற முடியாத கோரிக்கையை முன்வைத்து இதனை மேற்கொள்வதற்கு அரசியல் பின்புலமே காரணம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இலங்கை தாதிய உத்தியோகத்தர்

19 ➤

## சீனா தொடர்பாக கேட்பவர்கள் இந்தியாவுக்கு மௌனிப்பதேன்?

### சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கேள்வி



கொழும்பு, ஜூலை 2
'நாட்டில் சீனா முன்னிற்பது தொடர்பாகக் கேள்வி எழுப்புபவர்கள், யாழ்ப்பாணத்தில் இந்தியா முன்னிற்பது குறித்து ஏன் கேட்பதில்லை?' இவ்வாறு

19 ➤

## ஊர்காவற்றுறையில் விரைவில் ஒரு பகுதி தனிமைப்படுத்தல்?

யாழ்ப்பாணம், ஜூலை 2
ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்தில் கணிசமான தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதியைத் தனிமைப்படுத்துவதற்கான கோரிக்கை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.
ஊர்காவற்றுறை தம்பாட்டிக் கிராமத்தில் ஒருவருக்கு திடீர் காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தில் நேற்று

19 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

# வன்முறைகளைத் தடுக்க விஷேட பொலிஸ் ரோந்து

## அதிரடிப்படை, இராணுவத்தினரை இணைத்து செயற்படுமாறு பொறுப்பதிகாரிகளுக்கு யாழ். டி.ஐ.ஜி. உத்தரவு



**யாழ்ப்பாணம், ஜூலை 2**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அனைத்துப் பிரதேசங்களிலும் சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகே அறிவுறுத்தியுள்ளார்.**

அத்துடன், பொலிஸ் காவலரண்களையும் அதிகரிக்குமாறு சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மைய நாள்களாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீடுகளுக்குள் அத்துமீறும் வாள்வெட்டுக் கும்பல்கள் அங்குள்ளோரை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயிடம் வினவியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் சிறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வன்முறையில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள்.

அத்துடன், சில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அலுவலர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

பொதுமகன் ஒருவரின் முறைப்பாட்டை ஏற்க, பொலிஸ் நிலையத்தில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் எனது வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல் அனுப்பியிருந்தார். அவரது முறைப்பாட்டை ஏற்க மறுத்தமை தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

அத்துடன், முறைப்பாட்டாளர்கள் பலருடைய முறைப்பாடுகள் தேங்கிக்கிடக்கின்றன. அவை தொடர்பில் எனது கண்காணிப்பின் கீழ் துரித விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் வன்முறைச் சம்பவங்கள், பொலிஸ் அலுவலர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் எனது 071 859 22 00 என்ற வட்ஸ்அப் எண்ணுக்கு தகவல்களை வழங்கினால் உடனடி நடவடிக்கைக்கு அறிவுறுத்தல் வழங்குவேன்" என்றார். (த-20,26)

## பொலிஸ் அலுவலர் முல்லையில் உயிர்மாய்ப்பு

முல்லைத்தீவு, ஜூலை 2

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர் ஒருவர் தனக்குத்தானே துப்பாக்கிச் சூடு நடத்தி உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சாயன்ட் ஒருவரே இவ்வாறு தவறான முடிவு எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்றதும் அவர் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்துவிட்டார் என்பது தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழப்புத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-19)

## பெண் மீது சித்திரவதையா? மருத்துவமனையில் சேர்ப்பு

வவுனியா, ஜூலை 2

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மெனிக்பாம் பகுதியில் கடந்த 4 வருடங்களாக சித்திரவதைக்கு உட்பட்டுவந்தார் என்று கூறப்படும் 28 வயதுடைய பெண் ஒருவரை, அந்தப் பகுதி கிராம அலுவலர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிராம அலுவலருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின்படி, பொலிஸாரின் உதவியுடன் குறித்த பெண் மீட்கப்பட்டு செட்டிக்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பரிசோதனை மற்றும் விசாரணையின் பின்னர் மேலதிக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-18)

## உயிரிழப்பைத் தவிர்க்க மருத்துவமனை செல்லுங்கள்

### யாழ்.மாவட்டச்செயலர் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 2

கொரோனாத்தொற்று அறிகுறி இருந்தால் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுவதன் மூலம் உயிரிழப்பைத் தவிர்க்கலாம் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை சற்று அதிகரிக்கின்றது.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது;

சிலர் கொரோனாத்தொற்று அறிகுறி காணப்படும்போது வீடுகளில் இருந்தவாறு தமக்கு சிகிச்சை அளிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள். எனினும், இவ்வாறான செயற்பாட்டின் மூலம் சில பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன. அதாவது நோய்த்தொற்றுக்கு உள்ளாகி நோயின் தாக்கம் அதிகரிக்கும்போது சில வேளைகளில் இறப்பு சம்பவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். என்றார். (த-26)

## அரசுக்கு எதிராகப் போர்

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு உள்ளிட்ட அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு கொம்பனி வீதியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் மனோ கணேஷன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கருப்பு பட்டிகளை கழுத்தில் அணிந்து மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அரிசி மூட்டைகளை விலையுடனும், தேங்காய் மற்றும் பாண் என்பவற்றை காட்சிப்படுத்திய வாறும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரைப் போன்ற உருவம் பதிக்கப்பட்ட முகமூடிகளை அணிந்த வாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-இ)

இராஜாங்க அமைச்சர் கிளிநொச்சிக்கு வந்து

# வடக்கு மாகாணத்திலுள்ள குளங்களின் அபிவிருத்தி தொடர்பில் கலந்தாராய்வு

கிளிநொச்சி, ஜூலை 2

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ள குளங்கள் தொடர்பிலான தகவல்கள் மற்றும் அதன் முன்னேற்பாடுகள் தொடர்பில், கிளிநொச்சியில் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

பரந்தனில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்தில், குளங்கள் அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன வடிகாலமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜெயரத்ன, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இந்தக் கலந்துரையாடலை நேற்றுப் பிற்பகல் நடத்தினார்.

'நீர்ப்பாசன செழுமை'எனும் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் தொடர்பிலான முன்மொழிவுக் கூட்டமாக குறித்த கலந்துரையாடல் அமைந்திருந்தது.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்திலுள்ள பீடங்களின் பீடாதிபதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்களின் அதிகாரம் பஸிலுக்கே வழங்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் பரிந்துரை



**கொழும்பு.ஜூலை 2**
**அனைத்து அமைச்சுகளிலும் தலையிடுவதற்கான அதிகாரங்களை உள்ளடக்கிய அமைச்சை, பஸில் ராஜபக்சவுக்கு வழங்க வேண்டும்.**

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பஸில் ராஜபக்ச திரைமறைவில் பல அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். எனவே அவர் அமைச்சராவது தவிர்க்க முடியாத விடயம். அனைத்து அமைச்சுகளிலும் தலையிடுவதற்கான அதிகாரங்களை உள்ளடக்கிய அமைச்சை அவருக்கு வழங்க வேண்டும். அமைச்சுகளுக்கு தலைமைத்துவம் அவசியம். சில வேளைகளில் ஜனாதிபதி அனைத்தையும் அவதானிக்க முடியாத நிலை காணப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தலையிடக்கூடிய அதிகாரங்களுடன் அமைச்சொன்று காணப்பட்டால் அது சிறந்த விடயமாக அமையும்- என்றார்.(ஒ.4)



# ஊழியர்களை பணி நீக்காதீர்

## தொழிலதிபர்களிடம் பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு.ஜூலை 2
ஊழியர்களை பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாக, தொற்று நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ளுமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச அனைத்து. தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். இதில் வங்கிக் கடன் நிவாரணம் பெற்றுக் கொள்ளல், ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றல் மற்றும் கொவிட் வழிகாட்டுதல்களுக்கு அமைய ஆடை விற்பனை நிலையங்களைத் திறக்க அனுமதி பெறல், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி செயற்பாட்டுக்கு தனியான அமைச்சு அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு, நன்றியும் தெரிவிக்கப்பட்டது. (ஒ.4)

# இலங்கை வான்பரப்பில் இராணுவ ஒத்திகையா?

## இந்தியா மறுப்பு

கொழும்பு.ஜூலை 2
கூட்டு இராணுவ ஒத்திகைக்காக இலங்கை வான்பரப்பை பயன்படுத்துவதற்கு இந்தியா அனுமதி கோரியது என்று வெளியாகும் தகவல் உண்மையில்லை என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.
கூட்டு இராணுவ ஒத்திகைக்காக இலங்கை வான்பரப்பைப் பயன்படுத்துவதற்கு இந்தியா அனுமதி கோரியது. எனினும் இலங்கை அதனை நிராகரித்துவிட்டது என்று தகவல் வெளியாகியது.
இந்த நிலையில், இந்தியா கூட்டு இராணுவ ஒத்திகைக்காக, இலங்கை வான்பரப்பை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று நாம் எந்த வேண்டுகோளையும் இலங்கையிடம் விடுக்கவில்லை என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# தொண்டு நிறுவனங்கள் இலங்கைக்கு அழுத்தம்

கொழும்பு.ஜூலை 2
இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்துச்செய்யப்படும் வரை, ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை நிறுத்துமாறு அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட 15 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஐரோப்பிய நாடாளுமன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளன.
இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.
இதற்கிடையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்படும். எனினும் இரத்துச் செய்யப்படாது என்று அரச தரப்பு அறிவித்துள்ளது. (4)



# மருதனார்மடத்திலும் நேற்று வன்முறை

யாழ்ப்பாணம், ஜூலை 2
மருதனார்மடம் சந்தைக்கு முன்பாக உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல், அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியதோடு, ஒருவரைத் தாக்கி, வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்றது.
4 மோட்டார் சைக்கிள்களில் வாள், இரும்புக் கம்பி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்திறங்கிய 6 பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் புகுந்து பெறுமதியான தளபாடங்களை அடித்துடைத்து அடாவடியில் ஈடுபட்டுள்ளது என்று முறையிடப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதேவேளை, கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீடு புகுந்து கும்பல் ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் ஒருவரின் கை துண்டாடப்பட்டதோடு மேலும் ஐவர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-20)

# இன்றும் தொடர்கின்றது தாதியர்களின் போராட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 2
நாடு முழுவதும் உள்ள அரச தாதியர்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இருநாள்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர். அதனால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.
மருத்துவமனைகளுக்கு பல்வேறு சிகிச்சைகளுக்காக வந்திருந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். போராட்டத்தால், இரண்டு நாள்களுக்கு குறித்த தேவைகளை நோயாளர்கள் பெற்றுக்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
பதவி உயர்வு மற்றும் தாதியர் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்றும் போராட்டம் தொடரும் என்று தாதிய சங்கம் அறிவித்துள்ளது. (த-ஐ,110,56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்





# மடு மாதா தேவாலய திருவிழா திருப்பலி

**மன்னார், ஜுலை 2**

**மன்னார் மடு மாதா தேவாலய ஆடி மாத திருவிழா கடந்த மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.**

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல்ட் அன்ரனி ஆண்டகை மற்றும் கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுக்க உள்ளனர். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும், ஆசியும் வழங்கப்படும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றின் காரணமாக பக்தர்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து மடு திருத்தலத்துக்கு வருகைதருவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனாத் தொற்றில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் வகையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது. (எ-56)

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி சட்டத்தரணி மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜுலை 2

கருங்குளவிக்கொட்டுக்கு இலக்கான சட்டத்தரணி ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மீசாலை பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ஐ-9)



## உணவுப்பொதிகள் வழங்கல்

கிளிநொச்சி, ஜுலை 2

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கனடாவில் உள்ள செந்தில்குமரன் நிவாரண நிதியத்தால் இந்த உதவிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. முழங்காவில், கரியாலைநாகபடுவான், ஜெயபுரம், வலைப்பாடு, குமுழமுனை, பள்ளிக்குடா, செல்விபுரம் மற்றும் முட்கொம்பன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-13)



## ஓய்வு பெறுகின்றார் ஷானி அபேசேகர!

கொழும்பு, ஜுலை 2

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, தனது 35 வருடகால பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெறுவதற்கு தீர்மானித்துள்ளார்.

இதன்படி தனது ஓய்வு குறித்த கடிதத்தை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அவர் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கையையே உலுக்கிய, அரசியல் களத்தை அதிரவைத்த முக்கியமான சில கொலைச் சம்பவங்கள், கடத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் இவர் தலைமையிலேயே இடம்பெற்றிருந்தன.

21/4 தாக்குதல், ரோயல் பார்க் படுகொலை, பொன் சேகாமீதான குண்டுத் தாக்குதல், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை, ரதுபஸ்வெல சம்பவம் உட்பட மேலும் சில விசாரணைகளை பட்டியலிடலாம்.

பல மாதங்களாக காவல்துறை தடுப்பில் இருந்த ஷானி அபேசேகரவுக்கு அண்மையில்தான் பிணை கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. 1986 பெப்ரவரி 10 ஆம் திகதியே இவர் பொலிஸ் சேவையில் இணைந்துள்ளார். (எ-44)





## 18 பேருக்கு நேற்று கொவிட் பரிசோதனை

சாவகச்சேரி, ஜுலை 2



சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று 13 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும், 5 பேருக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன.

அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்ட 5 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட 13 பேருடைய மாதிரிகளும் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

# இறால் பண்ணை அமைக்க எதிர்ப்பு

மன்னார், ஜுலை 2

மன்னார், பேசாலையில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடற்கரையை அண்டிய கரைவலைப்பாடு பிரதேசத்தில் இறால் பண்ணை அமைக்க எடுத்த முயற்சிக்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடன் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் பேசாலையில், கரைவலைப்பாடு பிரதேசத்துக்கு அண்மையில் இறால் பண்ணை அமைப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்று தகவல் வெளியானதை அடுத்து, அந்தப் பகுதி மக்கள் அங்கு திரண்டனர்.

இறால் பண்ணை அமைத்தால் கரைவலை தொழிலுக்கு ஆபத்து என்று தெரிவித்து பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மன்னார் கடற்றொழில் திணைக்களமோ அல்லது இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்டவர்களோ இது தொடர்பில் மீனவ சமூகத்துக்குத் தெரியப்படுத்தவில்லை என்று குறிப்பிட்ட மக்கள், இந்த நடவடிக்கையால் கரைவலையை நம்பி வாழும் மீனவ குடும்பங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்றும் தெரிவித்தனர்.

அதையடுத்து, இறால் பண்ணை அமைக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன என்றும், பண்ணை அமைக்க வந்தவர்கள் திரும்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துண்டாடப்பட்ட கையை பொருத்திய நிபுணர்கள்!

## யாழ். போதனாவில் வெற்றிகர சத்திர சிகிச்சை

**யாழ்ப்பாணம், ஜூலை 2**

**யாழ்ப்பாணம் கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வாள்வெட்டுக்கு இலக்காகி துண்டிக்கப்பட்ட கை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையாளர்களின் கூட்டு முயற்சியால் பொருத்தப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திரசிகிச்சை கூடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சத்திர சிகிச்சை நேற்று அதிகாலை 4 மணிக்கு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் 8 பேர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஸ்ரூடியோ ஒன்றை நடத்தி வந்த இரு தரப்பினர் இரவு தங்கியிருந்தபோது பிறிதொரு 6 பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு 9.40 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வாள் மற்றும் கூரிய ஆயுதங்களுக்கு வந்த கும்பல் ,வீட்டைத் தாக்கியும் அந்த ஸ்ரூடியோ அமைந்திருக்கும் பகுதியை தீமூட்டி சேதப்படுத்தியுள்ளது. கார் மற்றும் முச்சக்கரவண்டி என்பனவும் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் கை துண்டாடப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவருக்கு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்களால் சத்திர சிகிச்சை மூலம் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ26)

# வீடு புகுந்து தாக்குதல்

சாவகச்சேரி, ஜூலை 2

வீட்டுக்குள் இரவுவேளை புகுந்த கும்பல் வீட்டில் இருந்தோரைத் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது. அந்த வீட்டில் இருந்த தந்தை, தாய், மகன் ஆகியோர் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை மேற்கு பங்களா வீதியில் நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-9)




# விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 2

தென்மராட்சி, தனங்கிளப்பு பிரதேசத்தில் நடந்த வாகன விபத்தில் மாற்றுத் திறனாளித் தம்பதியினர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர்கள் வீதியின் மறுபக்கத்தில் இருந்த ஒழுங்கைக்குள் திரும்ப முற்பட்டபோது, அதே மார்க்கத்தில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது. விபத்தில் கிட்டன் சசிகரன் (வயது-48), சசிகரன் கேசலா (வயது38) ஆகியோரே காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-9)

# நிரந்தர நியமனம் கோரும் டெங்கு ஒழிப்பு பணியாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 2

டெங்குத் தொற்று அதிகரித்திருந்த காலப் பகுதியில் சுகாதார அமைச்சால் நாடளாவிய ரீதியில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட டெங்கு நுளம்பு ஒழிப்புக் களத் தடுப்பு உதவியாளர்களுக்கு இன்னமும் நிரந்த நியமனம் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

2017ஆம் ஆண்டு நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டதால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து பணியாற்றும் வகையில் ஆயிரத்து 160 பேர் சுகாதார அமைச்சால் டெங்கு நுளம்பு களத் தடுப்பு உதவியாளர்கள் அனைத்து சுகாதார அதிகாரி பணிமனைகளிலும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் வீடு வீடாகச் சென்று டெங்குப் பரிசோதனைகளை மேற்கொண்டதுடன், புகை விசிறல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொடர்பாகப் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் திணைக்கள அலுவலர்களுடன் முழு நேர பங்களிப்பை மேற்கொண்டு வருகின்றனர். நியமனம் வழங்கப்பட்டு நான்கரை வருடங்கள் கடந்த நிலையில் இந்த பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)



# இலங்கைக்கு துருக்கி தடை

கொழும்பு,ஜூலை 2

இலங்கை, பங்களாதேஷ், பிரேஸில், தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் விமானங்களுக்கு துருக்கி தடைவிதித்துள்ளது. துருக்கியின் உள்துறை அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மறு அறிவித்தல் வரும் வரை தடை தொடரும்.

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடானது மேற்குறித்த நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைவாக, மேற்படி நாடுகளின் ஊடான தரை மற்றும் கடல் வழி பயணங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

# சீனாவின் பிடியில் கோத்தாபய அரசு

## தேசிய பாதுகாப்புக்கு அச்சம் என்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு,ஜூலை

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, சீனர்களின் பாதுப்பையே உறுதி செய்கின்றது. எனவே இலங்கையில் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய மகா சங்கத்தினரும், பாதுகாப்புப் படையினரும் முன்வர வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவிக்கையில், திஸ்ஸமகாராம வாவி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்த சீனப் பிரஜைகள் இராணுவச் சீருடையை அணிந்திருக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எந்தப் பகுதிகளில் அவர் இதனை அவதானித்துள்ளார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு பொய் கூறி மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க வேண்டாம். இவர்கள் நாட்டு மக்கள் பார்வையற்றவர்கள் என்று நினைத்துக்கொண்டுள்ளனர். திஸ்ஸமகாராம வாவியில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகள் முற்றிலும் தொல்பொருள் கட்டளைச் சட்டத்துக்கு முரணானவை. தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனை யாரிடம் சென்று முறையிடுவது என்று தெரியவில்லை. ஏனெனில் கோத்தாபய ராஜபக்சவின் அரசு சீனர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முன்னின்று செயற்படுகின்றது. எனவே தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இந்த விடயத்தில் நாம் அனைவரும் தலையிட்டு எமது உரிமைகளைப் பாதுகாப்போம். என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதுபானம் அருந்துவோர் 25 சதவீதத்தால் வீழ்ச்சி



கொழும்பு, ஜுலை 2

**இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குப் பிந்திய காலப்பகுதியில் மதுபானம் அருந்துவோரின் எண்ணிக்கை, 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கொரோனாத் தொற்றுக்கு முன்னரான காலத்தில் மதுபானம் அருந்துவதற்காக நாட்டு மக்கள் நாளாந்தம் 50 கோடி ரூபாவை செலவுசெய்து வந்தனர். ஆனால் தற்போது அந்தத் தொகை 35 கோடி ரூபா வரை வீழ்ச்சி கண்டுள்ளது. பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையே, இதற்குக் காரணம். இதைத் தவிர, சட்டவிரோத மதுபானப் பயன்பாடு மற்றும் போதைப்பொருள் பயன்பாடு ஆகியவற்றால் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் என்ற எண்ணப்பாடு மற்றும் அதிக நேரம் அமர்ந்திருந்து மது அருந்தும் இடங்கள் மூடப்பட்டமை ஆகியவையும் மதுபானம் அருந்துவோரின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு காரணம் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (4)



## மன்னார் சவுத்பாரில் 777 கிலோ மஞ்சள் மீட்பு

மன்னார், ஜுலை 2

மன்னாரில் மஞ்சள் கடத்திய குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், 777 கிலோ 600 கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் சவுத்பார் பகுதியில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை வாகனம் ஒன்றும், ஓட்டோ ஒன்றும், படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூடைகள், வாகனங்கள் மற்றும் சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-213)

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

## கடந்த மூன்று நாள்களில் 33,382 பேருக்கு 2ஆவது தடுப்பூசி

### மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜுலை 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 3 நாள்களில் 33 ஆயிரத்து 382 பேர் இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மே மாத இறுதியிலும் ஜுன் மாத ஆரம்பத்திலும் கொவிட்-19 நோய்க்கு எதிரான சைனோபோர்ம் முதலாம் கட்ட தடுப்பூசியேற்றும் பணிகள் இடம்பெற்றன.

இரண்டாம் கட்ட தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த ஜுன் 28 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 28 ஆம் திகதி 10 ஆயிரத்து 110 பேருக்கும், 29 ஆம் திகதி 13 ஆயிரத்து 182 பேருக்கும், 29 ஆம் திகதி 10 ஆயிரத்து 90 பேருக்குமாக மொத்தமாக கடந்த மூன்று நாள்களிலும் 33 ஆயிரத்து 382 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

தொடர்ந்து இன்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட நிலையங்களில் தடுப்பூசி வழங்கும் பணிகள் இடம்பெறும்.

இந்த ஐந்து நாள்களிலும் இரண்டாவது தடுப்பூசியைப் பெறத் தவறியவர்களுக்கு நாளை சனிக்கிழமை அந்தந்த பிரதேசத்துக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் காலை 8 மணி முதல் தடுப்பூசி ஏற்றப்படும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு முதற்கட்ட தடுப்பூசி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளிலும் வழங்கப்பட்டிருந்தது.

இவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் இதே மருத்துவமனைகளில் வழங்கப்படும்- என்றார். (ஐ-26)



## 12,000 கிலோ கத்தரிக்காய் தீயிட்டு அழிப்பு

கொழும்பு,ஜுலை 2

தம்புள்ள விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் விளைந்த சுமார் 12 ஆயிரம் கிலோக்கிராம் கத்தரிக்காய் குவியலுக்கு தீ வைத்துள்ளார்.

ஐந்து ஏக்கர் காணியில் கத்தரிக்காயை விதைத்த விவசாயிக்கு, 14 ஆயிரம் கிலோக்கிராம் அறுவடை கிடைத்தது. எனினும் அவற்றில் 2 ஆயிரம் கிலோக்கிராம் கத்தரிக்காயை மட்டுமே விற்பனைசெய்துள்ளார்.

பூச்சிக்கொல்லி மருந்து கிடைக்காததால், ஏனையவற்றை விற்பனை செய்ய முடியவில்லை. அந்த விரக்தியில் அவர் கத்தரிக்காய் குவியலுக்கு தீ வைத்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.4)

## ஒழுக்கமற்ற பொலிஸாருக்கு கடுமையான சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஜுலை 2

ஒழுக்கமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸாருக்கு எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நெலுவ பகுதியில் பதிவான சம்பவம் உட்பட ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு சிலரின் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த பொலிஸ் திணைகள உத்தியோகத்தர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)



## வவுனியா நகரப்பகுதி சுற்றிவளைப்பு 400 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

வவுனியா, ஜுலை 2

வவுனியா மாவட்டத்தில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகரப்பகுதி இராணுவம் மற்றும் பொலிஸாரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா நகரின் பசார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி என்பவை சுற்றிவளைக்கப்பட்டு குறித்த பகுதியில் இருந்து மக்கள் வெளியேற தடை விதிக்கப்பட்டு, நான்கு இடங்களில் சுகாதாரப் பிடிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் பணியாற்றியோர், நகருக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்தோர் மற்றும் வாகனச் சாரதிகள் என சுமார் 400க்கு மேற்பட்டவர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பி.சி.ஆர். முடிவுகளின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இலங்கை எனும் சிம்பாப்வே

கடந்த சில நாள்களில் கிட்டத்தட்ட 220 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நாணயத்தாள்கள் இலங்கை மத்திய வங்கியால் அச்சிடப்பட்டுள்ளன. கொரோனாப் பெருந்தொற்று மற்றும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயணத்தடையால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிதைவு என்பன காரணமாகத்தான் இந்த நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும், மேற்படி நடவடிக்கையானது நாட்டை மேலும் படுகுழிக்குள் தள்ளும் செயலேயன்றி வேறில்லை.

முடங்கிப்போன பொருளாதாரத்தை மீட்பதற்குரிய வழியாக கூடுதலாக நாணயத்தாள்களை அச்சிடுவதைக் கொள்ள முடியாது. உண்மையில் இந்த கூடுதல் நாணயத்தாள்கள் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் சிதைக்கப்போகும் கருவிகள். பண வீக்கத்தை ஏற்படுத்தப்போகும் முக்கிய காரணிகள்.

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் ரொபேட் முகாபே ஆட்சியமைத்திருந்த காலத்தில் நாடெங்கிலும் நிலவிய, நீடித்த வறுமை மற்றும் பொருளாதாரப் பின்னடைவை சமாளிக்கவும் பூசிமெழுகவும் அவர் கைக்கொண்ட நடவடிக்கைதான் இந்த நாணயத்தாள்கள் அச்சிடல். இவ்வாறு அச்சிடுவதால் என்ன நடக்கும்? என்ற கேள்வி மக்கள் மனங்களில் எழலாம். அதாவது நாட்டில் பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். ஆனால், அந்தப் பணத்துக்கு உரிய பெறுமதியோ அல்லது கனதியோ இருக்காது. இன்னும் சொல்லப்போனால் உங்கள் கைகளில் 10 ஆயிரம் ரூபா இருப்பதென்பது மிகச் சாதாரணமான விடயமாக மாறிவிடும். ஆனால், அந்தப் 10 ஆயிரம் ரூபா ஒருநாள் செலவுக்கே போதுமானதாகவோ அல்லது மட்டுமட்டானதாகவோ மாறிவிடும். பொருள்களின் விலைக்கும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு உங்களிடம் இருக்கும் பணத்துக்கும் இடையிலான வேறுபாடு மலையும் மடுவும்.

ஏற்கனவே டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அனுதினம் சரிந்துகொண்டிருக்கையில் தற்போது இந்தக் கூடுதல் நாணயத்தாள்கள் டொலரை மேலும் மவுசேற்றப் போகின்றன. இதனால் டொலருக்கு நிகரான தாக்குப்பிடித்தலை ரூபாவால் செய்யவே முடியாது. இதன் விளைவாக சர்வதேச வர்த்தகம்கூட இலங்கைக்கு 'பளார்' விடப்போகின்றது.

கொரோனாவால் உலகமே முடங்கிப்போயுள்ளது. அதற்கு இலங்கை ஒன்றும் விதிவிலக்கல்ல. ஆதலால் கொரோனாவால் ஏற்பட்ட பாதிப்புத்தான் இது என்று அரசு இவ் விடயத்தில் சமாளிப்புக்களை மேற்கொண்டுவிட முடியாது. இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலால் நாட்டின் மீன்பிடித்துறைக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு சொல்லி மாளாதது. இதுமட்டுமல்ல இப்படி எத்தனையோ விடயங்களில் அரசின் மெத்தனப்போக்குத்தான் நாட்டின் பொருளாதாரச் சிதைவுக்கு முதன்மைக் காரணம்.

அரசு இவ்வாறான தவறுகளை முதலில் சரிசெய்ய வேண்டும். துறைசார் வல்லுநர்களின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி செயற்பட வேண்டும். மாறாக நாணயத்தாள்களை அச்சிட்டு நாட்டில் பணப்புழக்கத்தை ஏற்படுத்துவது ஆகப்பெரிய முட்டாள்தனம். இந்தக் கூடுதல் பணத்தாள்கள் அடுத்த சில வாரங்களுக்கோ அல்லது மாதங்களுக்கோ அரசின் மீதான விமர்சனக்கணையை திசைதிருப்பலாம். ஆனால் விரைவில் அதன் பாரதூரமான தாக்கத்தை அரசும் நாட்டு மக்களும் எதிர்கொள்ள வேண்டி வரும்.



# 'டெல்டா' வைரஸ் பரவல் உரிய ஆய்வு அவசியம்!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்துகின்றது

**கொழும்பு, ஜூலை 2**

**கொவிட் வைரஸின் டெல்ரா திரிபு தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு உண்மையான நிலவரம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண நேற்றுத் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் தற்போதும் நாளாந்தம் 2 ஆயிரம் வரையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் சில இடங்களில் டெல்ரா திரிபுடனும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெல்ரா வகை வைரஸ் தொடர்பில் அனைத்து பகுதிகளிலும் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, சரியான பெறுபேறுகளை எமக்கு வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

டெல்ரா திரிபு தொடர்பாக எமக்கு முழுமையான அனுபவம் இல்லை. தற்போதுகூட கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன. பொறுப்புடன் செயற்படாவிட்டால் மீண்டும் நெருக்கடியான நிலைமை ஏற்படக்கூடும் - என்றார்.

(எ-44)

# பஸில் பதவிக்கு வந்தால் கப்பலின் கதியே நாட்டுக்கு

## சம்பிக்க சாட்டையடி

கொழும்பு, ஜூலை 2

பஸில் ராஜபக்ச பொருளாதார விவகார அமைச்சராக பதவியேற்றால், 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலுக்கு நேர்ந்த கதியே இலங்கையின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.



பஸில் ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; சேற்றுக் குழிக்குள் விழுந்தவர்கள் துள்ளக்கூடாது. அவ்வாறு துள்ளினால் முழுமையாக சேற்றில் மூழ்க வேண்டிய நிலையே ஏற்படும். இலங்கை கடற்பரப்புக்குள் வைத்து எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்து அனர்த்தத்துக்குள்ளான போது, கப்பற்றுறை அமைச்சரும், துறைமுக அதிகார சபையினரும் கதை அளந்தனர். இறுதிக் கட்டத்தில் தான் கப்பலை இழுக்க முற்பட்டனர். அப்போது என்ன நடந்தது. கப்பல் உடைந்து கடலுக்குள் மூழ்கியது. பஸில் ராஜபக்ச என்பவரும் அவ்வாறுதான். இலங்கை எனும் கப்பலும், பொருளாதாரமும் தீப்பிடித்து எரிந்துள்ளது. எனவே, இவற்றை இழுப்பதற்கான பொறுப்பை பஸிலிடம் கொடுத்தால் இவையும் மூழ்கிவிடும். கடைசியில் கப்பலுக்கு நேர்ந்த கதிதான் எமது நாட்டுக்கும் நேரும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உமையாள்புரத்தில் மணல் அகழ்வு; கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூலை 2

கிளிநொச்சி, கண்டாவளை உமையாள்புரம் பிரதேசத்தில் தொடர்ச்சியா இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், உமையாள்புரம் பகுதி ஆனையிறவு கடல்நீரேரிக்கு அருகில் உள்ள கிராமம். இதன் காரணமாக கிராமத்தின் பெரும்பாலான பகுதிகள் உவராக காணப்படுகின்றன.

உவராக காணப்படும் பிரதேசத்தின் அளவு அதிகரித்து வரும் நிலையில் குறித்த பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக மேலும் உவராகும் நிலை காணப்படுகிறது. கரைச்சி பிரதேச சபையின் கழிவு அகற்றும் பகுதியில் சட்டவிரோதமாக உழவு இயந்திரங்கள் மூலம் அகழப்படும் மணல் சேமிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து டிப்பர்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

எனவே உமையாள்புரம் கிராமத்தின் எதிர்காலம் கருதி அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த உரிய தரப்பினர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் முழுக் கிராமமும் இன்னும் ஒரு சில வருடங்களில் உவர் நிலமாக மாறிவிடும் அபாயம் காணப்படுகின்றது- என்றனர். (ஐ-214)

# அலரி மாளிகையின் ஒரு பகுதி பஸிலுக்கு

கொழும்பு,ஜூலை 2

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்காக, அலரி மாளிகையின் ஒரு பகுதி தயார்செய்யப்பட்டு வருகின்றது என்று அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

பஸில் ராஜபக்ச அடுத்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளார்.

நிதி மற்றும் பொருளாதார அமைச்சு அவருக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், அலரிமாளிகையின் ஒரு பகுதி அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவருக்காக ஒதுக்கப்படும் அமைச்சின் அலுவலகத்தை அலரி மாளிகையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 19 . 05 . 1949

மறைவு 13 . 07 . 2020



### அமரர் இராசாத்தி சங்கரப்பிள்ளை

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுச் சென்று
ஓராண்டு உருண்டோடி விட்டதே!
நம்ப முடியவில்லை? உங்கள் இனிய அன்பான
கதைகள் எம் காதுகளில் ஒலிக்கின்றது
உங்கள் சிரித்த முகம் அன்பான
பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது.
எம்முடன் கூடவே இருக்கின்றீர்கள் நீங்கள்
மறையவில்லை என்றென்றும்
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்

மட்டுவில் கிழக்கு,
கல்வயல், சாவகச்சேரி.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 01 . 1954

மறைவு 13 . 07 . 2020



### அமரர் சிவபாதம் தனலெட்சுமி

திதி : அட்டமி

ஆண்டொன்று ஆனதம்மா இன்று !
ஈன்றெம்மைப் பெற்றவளே!
உனை இழந்து! உமைப் பிரிந்தோம்
பல நாள் ஊணுறக்கம் மறந்தோம்!

அழுதழுது தேடுதம்மா
எம் விழிகள் உங்களை காண்பதற்கு
ஒருமுறை வருவீர்களோ!
உங்கள் திருமுகம் காண்பதற்கு
அழுத விழிகளுக்கு ஆறுதல் தருவீர்களோ!

எம்மைப் பிரிந்தவளே! ஏன் எம்மைப் பிரிந்தாய்!

ஐயமில்லை! ஒன்று இரண்டு ஏன்
ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
உமை மறவோம் உங்கள்
நினைவுகளைச் சுமந்து வாழ்வோம்!

உங்கள் ஆத்மா சாந்திப்பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா தலைமையில் விரைவில் புதிய கட்சி

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

**கொழும்பு,ஜூலை 2**
**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புதிய கட்சியொன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளார். அதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலரும் இணையக்கூடிய சாத்தியம் உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

சந்திரிகா குமாரதுங்கவின் புதல்வரும், பிரிட்டனில் கால்நடை மருத்துவ அதிகாரியாகத் தொழில்புரிந்து வருபவருமான விமுக்தி அரசியலில் பிரவேசிக்கவுள்ளார்.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், நடைபெறவுள்ள தேர்தலில் தனது மகனை சுதந்திரக் கட்சியில் நிறுத்துமாறு, சந்திரிகா குமாரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் அந்தக் கோரிக்கைக்கு இதுவரை மைத்திரி அணியினர் பதிலளிக்கவில்லை.

அதேவேளை எதிர்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருந்தும் சந்திரிகா குமாரதுங்கவின் மகனுக்கு அழைப்பு வந்தது. அதற்கு சந்திரிகா தரப்பிலிருந்து இதுவரை பதிலளிக்கவில்லை.

இவ்வாறான சூழ்நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து தற்போது சஜித் அணியில் இணைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம உள்ளிட்ட பலருடன் இணைந்து, சந்திரிகா குமாரதுங்க புதியகட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ.4)



அம்பாறை சாய்ந்தமருது முகத்துவாரத்தில் மீனவர் ஒருவரது வலையில், சுமார் 270 கிலோ எடையுள்ள கொப்பூர் மீன் சிக்கியுள்ளது. அது ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (4)

# சிறுவர்களைத் தாக்கி பாலியல் துர்நடத்தை

## பெண்ணொருவர் கைது



கொழும்பு,ஜூலை 2
மிட்டாய் உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பயிற்சி பெற்ற சிறுவர்களைக் கொடூரமாகத் தாக்கி, பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி பஹிரவகந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காக, விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான அரச தொழில் பயிற்சி நிறுவனத்திலிருந்து குறித்த சிறுவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். பெண் ஊழியர் ஒருவர் குறித்த சிறுவர்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி, கொடூரமாகத் தாக்கியுள்ளார். இதனையடுத்து தாக்குதலுக்கு இலக்கான இரண்டு சிறுவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச்சென்ற சிறுவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக மற்றைய சிறுவன் மீட்கப்பட்டான். மீட்கப்பட்ட சிறுவன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான்.

தம்மை வீடுகளுக்குச் செல்லவிடாமல் நாளாந்தம் கொடூரமாகத் தாக்கி பணியில் ஈடுபடுத்தினர் என்று பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 41 வயதுடைய பெண்ணுக்கு மேலதிகமாக குறித்த மிட்டாய் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் அவரது மகன் ஆகியோர் சிறுவர்களுக்கு ஆபாச படங்களைக் காண்பித்து துன்புறுத்தியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

# புங்குடுதீவு - கேரதீவு வீதி சீரமைப்பு: சூழகத்தின் ஏற்பாட்டில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
புங்குடுதீவு பிரதேசத்தில் ஊரதீவு - கேரதீவு இணைப்பு வீதியானது நீண்ட காலத்தின் பின்னர் சீரமைக்கப்படவுள்ளது. இவ் வீதியின் ஒரு பகுதி ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வடக்கு மாகாணசபையின் ஒதுக்கீட்டு நிதியில் சீரமைப்புச்' செய்யப்பட்டிருந்தது .

கடந்த வருடம் யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் கா. குகபாலன், -மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி முருகானந்தவேல் மற்றும் இறுபிட்டி மக்கள் சேவா சங்கத்தின் தலைவர் து. சுந்தரலிங்கம் ஆகியோர் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் நேரடியாக விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ரூபா 20 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவ் வீதியானது பூரணமாக திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன .

அதனை அடுத்து வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வேண்டுகோளுக்கு இணங்க சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் ஊரதீவு, கேரதீவு மக்களின் ஒத்துழைப்புடன் கொளுத்தும் வெயிலின் மத்தியிலும் தொடர்ச்சியாக பத்து நாள்களாக சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு பெக்கோ இயந்திரம் ஊடாகவும் மேற்படி வீதியைச் சூழ்ந்திருந்த பற்றைக்காடுகள் துப்புரவுசெய்யப்பட்டன .

இதற்கான நிதியுதவியாக வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் 40ஆயிரம் ரூபாவை தனது சொந்த நிதியில் வழங்கியிருந்தார்.

அத்தோடு மேற்படி பணிகளுக்காக சுவிஸ் வாழ் புங்குடுதீவு உறவுகளான நவரத்தினம் சிவானந்தன் (சிவா) மற்றும் திருமதி சுரேஷ் ஆனந்தி ஆகியோர் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ப)





திருகோணமலை குச்சவெளி கல்மெடியாவ் பகுதியில் மோரா என்றழைக்கப்படும் பெரிய மீன் இனம் ஒன்று கடந்த திங்கட்கிழமை கரை ஒதுங்கியுள்ளது. (ஐ)



# புலிகளை நினைவுகூருவோரை தடுப்பதற்கு அரசு புதிய வியூகம்

கொழும்பு,ஜூலை 2
தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூருதல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டுமாயின், அரசமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளை நினைவுகூரிய குற்றச்சாட்டில் மட்டக்களப்பில் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனினும் நாடாளுமன்றில் விடுதலைப்புலிகளை நினைவுகூரும் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லயாராக இருந்தாலும் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் நினைவு நிகழ்வுகளை நடத்துவதில் எவ்வித பிரச்சினையுமில்லை.

எனினும் பொதுவான நிகழ்வுகளை நடத்துவதில் பிரச்சினை காணப்படுகின்றது. நாட்டைப் பிளவுபடுத்தும் செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்க முடியாது.

அவ்வாறு உறுதியளித்தே நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர். இந்த நிலையில் விடுதலைப்புலிகள் தொடர்பில் ஏதாவது கருத்துக்களை உறுப்பினர்கள் வெளிப்படுத்துவார்கள் எனின், சபாநாயகர் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பார். ஆகவே கைதுசெய்யப்பட்ட ஒன்பது பேர் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றதன் பின்னரே, தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

நாடாளுமன்றுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் சில விடயங்களுக்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும். எனினும் அதே விடயத்துக்கு நாடாளுமன்றுக்குள் நடவடிக்கை எடுக்க முடியாது. அவ்வாறு அதில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனின் நாடாளுமன்ற யாப்பை மாற்றியமைக்க வேண்டும்.

அதற்கு ஏதாவது ஆலோசனைகள் இருந்தால் கூறுங்கள் நாம் அது தொடர்பில் அவதானம் செலுத்துகின்றோம்- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசிப் பற்றாக்குறை தொடர்பில் அமைச்சர்களின் மாறுபட்ட தகவல்

கொழும்பு,ஜூலை 2

நாட்டில் அரிசிப் பற்றாக்குறை தொடர்பில், அமைச்சர்கள் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் அரிசிப் பற்றாக்குறை இல்லை என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவும், அரிசிப் பற்றாக்குறை உள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவும் தெரிவித்துள்ளனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபையால் ஒரு கிலோ நாட்டரிசி நெல்லை 50 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா நெல்லை 52 ரூபாவுக்கும் கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கமத் தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சந்தையில் அரிசியின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ சிவப்பரிசி 110 ரூபாவுக்கும், பச்சை அரிசி115 ரூபாவுக்கும், நாட்டரிசி 125 ரூபாவுக்கும், சம்பா அரிசி 155 ரூபாவுக்கும், கீரிச் சம்பா 220 ரூபாவுக்கும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அரிசிப் பற்றாக் குறை காரணமாக, ஒரு லட்சம் மெற்



றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## பொலிஸ் நிலையத்தில் சிறுமியை முத்தமிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்

கொழும்பு,ஜூலை 2

முறைப்பாடளிக்கச் சென்ற சிறுமியை, பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஒருவர் முத்தமிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நெலுவ பொலிஸ் நிலையத்தில் நடந்துள்ளது.

நெலுவ மேல் கிடும்மடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமி ஒருவர் தனது தாயுடன், முறைப்பாடு பதிவுசெய்வதற்காக நெலுவ பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

விசாரணைகளுக்காக என்னையும், எனது மகளையும் இரவு வரையில் பொலிஸ் நிலையத்தில் தங்கி இருக்குமாறு அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் மறுநாள் காலை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நாம் தங்கியிருந்த அறைக்கு வந்தார். அவர் எனது மகளை முத்தமிட்டார் என்று தாய் தெரிவித்துள்ளார்.

இளைஞன் ஒருவரால் சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், இளைஞன் காணொளி மற்றும் புகைப்படங்களையும் பதிவு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய் வதற்காக சென்றபோதே விபரீதம் நடந்துள்ளது.

சிறுமியை முத்தமிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

## தபால் பொருள்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட வரி

கொழும்பு,ஜூலை 2



ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் பொருள்களுக்கு விதிக்கப்படும் மறு சீரமைக்கப் பட்ட வரிக் கொள்கை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 26 நாடுகளுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தவிர ஏனைய தபால் பொருள்களுக்கு இந்த வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளமைக்கு அமைய தபால் நுகர்வோர், இணையவழி விற்பனையில் ஈடுபடுவோர் மற்றும் இணையவழி மூலம் விற்பனைசெய்யப்படும் பொருள்கள் ஆகியவற்றுக்கு இந்த புதிய வரிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.4)



## சிசுவை உயிருடன் புதைத்த கொடூரம்

கொழும்பு,ஜூலை 2

சிசுவைப் பிரசவித்த பெண், சில நிமிடங்களிலேயே அதனை உயிருடன் புதைத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தும்மலசூரிய, மரக்களமுல்ல பிரதேசத்தில் நடந்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, வீட்டின் பின்புறத்தில் புதைக்கப்பட்ட சிசு உயிரற்று மீட்கப்பட்டது.

சிசு பிறந்து சில நிமிடங்களிலேயே புதை க்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிசுவைப் பிரசவித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தும்மலசூரிய பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.4)

## கடமைக்கு இடையூறு: ராணுவ அதிகாரி கைது



கொழும்பு,ஜூலை 2

மின்னேரியா தேசிய பூங்காவில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மின்னேரியா தேசிய பூங்காவுக்குள் அனுமதியின்றி நுழைந்த இரண்டு இராணுவ வாகனங்களை ஆய்வுசெய்தபோது, இராணுவ சிரேஷ்ட அதிகாரி ஒருவருக்கும், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிலருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இதனையடுத்து இரு தரப்பிலிருந்தும் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் விசாரணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையில், அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி உள்ளிட்ட ஏனையோரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி பொலிஸ் நிலையத்தில் முன்னிலையானதையடுத்து, பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். (ஒ.4)

# இலங்கைத் தூதுவரை இத்தாலி ஏற்கவில்லை

கொழும்பு,ஜூலை 2

ரோமுக்கான இலங்கைத் தூதுவராக முன்னாள் விமானப்படை தளபதி சுமங்கள டயஸ் நியமிக்கப்பட்டுள்ள போதும், இத்தாலி இன்னமும் அவரது நியமனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரோமுக்கான தூதுவராக முன்னாள் விமானப்படைத் தளபதியை நியமிப்பதற்கு உயர் பதவிகள் தொடர்பான நாடாளுமன்ற குழு அனுமதி வழங்கியிருந்தது. போர்க் குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து கனடா சுமங்கள டயஸை தூதுவராக ஏற்றுக் கொள்ள மறுத்தது.

இந்த நிலையில் இந்த நியமனத்தை இத்தாலி இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாஹம தெரிவிக்கையில்,

தங்கள் உயிரைப் பணயம் வைத்து நாட்டுக்காகப் பாடுபட்டவர்களை சர்வதேச சமூகத்தின் ஒரு பிரிவினர் துன்புறுத்துகின்றனர்.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மற்றுமொரு அதிகாரிக்கு ஆஸ்திரேலியா விசா மறுக்கப்பட்டுள்ளது. இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்களுக்கு 63 வயதில் ஓய்வு

**கொழும்பு, ஜூலை 2**

**அரச சேவையில் உள்ள அனைத்து தரத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளுக்கும் ஓய்வுபெறும் வயது 63 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.**



இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு, பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நீடித்து, ஓய்வூதியச் சட்டத்தில் திருத்தம் செய்ய கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது.

முன்னதாக, அரச சேவையில் அனைத்துத் தரங்களின் மருத்துவ அதிகாரிகளுக்குமான கட்டாய ஓய்வுவயது எல்லை 60 ஆகக் காணப்பட்ட நிலையில், இது கடந்த ஆண்டு 61 ஆக நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)



## தடைமீறிப் பயணித்த பஸ் மடக்கிப் பிடிப்பு

### *38 பேர் கைது*

கொழும்பு.ஜூலை 2

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டது. பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் உள்ளிட்ட பயணிகள் 38 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில், கிரேன்பாஸில் வைத்து குறித்த பஸ் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

## ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு.ஜூலை 2

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக ஹட்சன் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே தலைவராக இருந்த ஜயம்பதி பண்டார, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட நிலையில், குறித்த பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. இதனையடுத்து ஹட்சன் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1969 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் தயாரிப்பாளராக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)



## ஒரே நாளில் 1,70,995 பேருக்கு சைனோ.ஃ.போர்ம் தடுப்பூசி

கொழும்பு.ஜூலை 2

ஒரே நாளில் அதிகளவானோருக்கு நேற்றுமுன்தினம் சைனோஃபோர்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 995 பேருக்கு இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 91 ஆயிரத்து 759 பேருக்கு முதல் டோஸும், 79 ஆயிரத்து 236 பேருக்கு இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## 6 நாடுகளுக்கான தடை நிபந்தனைகளுடன் நீக்கம்

கொழும்பு.ஜூலை 2

மத்திய கிழக்கின் ஆறு நாடுகளிலிருந்து வருகை தரும் விமானப் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை, நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டுள்ளது.

கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான், பஹ்ரைன், குவைத் ஆகிய நாடுகளிலிருந்து வருகைதரும் பயணிகளுக்கு நிபந்தனைகளுடனான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்தார்.

இவர்கள் இலங்கைத் தூதரகத்தால் அனுமதி வழங்கப்பட்ட நிலையங்களில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறில்லையெனில் குறித்த நாடுகளின் விமான நிறுவனங்கள் அனுமதி வழங்கிய நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த 6 நாடுகளில் இருந்தும் பயணிகள் இலங்கைக்குள் பிரவேசிக்க எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

## சிறுமி விற்பனை: மேலும் மூவர் கைது



கொழும்பு.ஜூலை 2

சிறுமியொருவரை இணையம் ஊடாக பாலியல் நடவடிக்கைகளுக்கு விற்பனைசெய்தனர் என்ற குற்றச்சாட்டில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிஹிந்தலைப் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாயார் உள்ளிட்ட 21 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இணையத்தளம் ஊடாக, குறித்த சிறுமியை விளம்பரப்படுத்தி, பலருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் கல்கிசை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## காதல் விவகாரத்தால் பெண்கள்மீது தாக்குதல்

கொழும்பு.ஜூலை 2

காதல் விவகாரத்தால், வீட்டுக்குள் அத்துமீறி பிரவேசித்த குழுவினர், அங்கிருந்த மூன்று பெண்களைக் கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் மாரவில, மாவில பிரதேசத்தில் நடந்துள்ளது.

இது தொடர்பான காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகி உள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற பின்னர் சம்பவ இடத்தில் வாள்கள், பொல்லுகள் மற்றும் இரும்புச் சங்கிலிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த ஆணும், தாக்குதலுக்கு உள்ளான குழுவைச் சேர்ந்த பெண் ஒருவரும் காதலித்து வந்துள்ள நிலையில், பின்னர் அவர்கள் பிரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து குறித்த இளைஞன் வெளிநாடு சென்றுள்ளார். பின்னர் குறித்த பெண்ணின் புகைப்படங்களை மாற்றியமைத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் இளைஞனின் தாயாருக்கு பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களின் அரசியல் முடிவுக்கு!

## *விரைவில் புதிய கட்சியை உருவாக்குவோம் என்கிறார் குமார வெல்கம*



**கொழும்பு,ஜூலை 2**

**இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலோடு ராஜபக்சக்களின் அரசியல் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இணையாக, புதிய கட்சியொன்று விரைவில் உருவாக்குவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடுதற்போது முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலைமைகளில் இருந்து, பஸில் ராஜபக்சவால் நாட்டை மீட்க முடியாது. பஸிலால் மட்டுமல்ல இந்த அரசிலுள்ள ஏனையோராலும் அதனைச் செய்ய முடியாது. முழு நாட்டையும் ராஜபக்சக்களுக்கு வழங்கவே முனைகின்றனர்.

மஹிந்த ராஜபக்சவைத் தவிர்த்து ஏனைய ராஜபக்சக்கள் அனைவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே. ராஜபக்சக்களின் குடும்பத்தில் தற்போது பிறந்திருக்கும் குழந்தைகள் அரசியலுக்கு வந்தாலும், நாட்டை நாசமாக்குவதைத் தவிர்த்து அவர்களால் வேறு எதனையும் செய்யமுடியாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இணையான கட்சி ஒன்றை அமைப்போம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக இருக்கும்போதே எதனையும் செய்யவில்லை. அமைச்சர் பதவிகளைக் கொண்டா எதனையும் செய்துவிடப்போகிறார்? அவர் வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதே நல்லது -என்றார். (ஒ.4)



## கிழக்கில் கொரோனா உச்சம் சுகாதாரப் பரிசோதகர்களால் வீதிகள்தோறும் களப்பணி

மட்டக்களப்பு,ஜூலை 2

கிழக்கு மாகாணத்தில் உக்கிரமடைந்து வரும் கொரோனா அலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உள்ளூர் மற்றும் முதன்மை வீதிகளில் களப்பணிகள் மெற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களின் சுகாதார நலன்கருதி சந்தைகள், பொது இடங்கள் மற்றும் பொது வீதிகள் போன்ற இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேற்பார்வைக் குழு நியமிக்கப்பட்டு களச் செயற்பாடுகள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. (ஐ)

## மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் கவனத்துக்கு

கொழும்பு,ஜூலை 2

மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் ஆகியவற்றை சட்டக்கோவையின் கீழ் பலப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தலைமையில், பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்லைன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

கொரோனாத் தொற்று நிலைமைகளுக்கு மத்தியில் அரசால் முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள், மாற்றுத்திறனாளிகளின் தொடர்பாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் தொடர்பான சமூகத்தின் அக்கறை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இதற்காக ஒன்றிணைந்து செயற்படுவது அனைவரதும் பொறுப்பாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதேவேளை மாற்றுத்திறனாளிகளை இனிமேல் ஊனமுற்றவர்கள் என்று அழைக்கக்கூடாது எனவும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது. (ஒ.4)



## ஆதிவாசிகளுக்கும் கொரோனாத் தடுப்பூசி

கொழும்பு,ஜூலை 2

ஆதிவாசிகளுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது. முதல் தடுப்பூசி தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோவுக்கு செலுத்தப்பட்டது.

தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட இலங்கையின் முதலாவது பழங்குடியினர் இவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் உள்ள ஆலயமொன்றில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த தடுப்பூசி முகாமில், ஆதிவாசிகள் மக்கள் குழு, தங்கள் தலைவருடன் சேர்ந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கண்டியில் நடத்தப்படும் வருடாந்த எசல பெரஹேராவின் தொடக்க விழாக்களில் இவர்கள் பங்கேற்கவுள்ளதால் தடுப்பூசிசெலுத்தப்பட்டுள்ளது. (ஒ.4)

## மீண்டும் குப்பை மேடானது கண்டுவில் மேற்கு ஒழுங்கை


***மூக்கைப் பொத்தி பயணிக்க வேண்டிய நிலை***

சாவகச்சேரி, ஜூலை 2

சாவகச்சேரி நகர் கண்டுவில் மேற்கு ஒழுங்கையில் மீண்டும் வாகனங்களில் வருவோரால் குப்பைகள் வீசப்பட்டு வருவதால், அதிலிருந்து எழும் துர்நாற்றத்தால் அயலில் வதியும் குடியிருப்பாளர்கள் மற்றும் வீதியில் செல்வோர் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டச்சு வீதியிலிருந்து இந்த வீதிக்குச் செல்லும் கண்டுவில் குளத்தை அண்டிய பகுதியில் காணப்படும் வயல்களில் காலபோக நெற்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய இரு பகுதிகளிலும் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. இந்த வீதியில் இரவு வேளைகளில் கழிவுப்பொருள்களை வாகனங்களில் ஏற்றிவந்து வயல்வெளியில் வீசிவிட்டுச் செல்கின்றனர். இதனால் அதனுள் காணப்படும் கழிவுகளிலிருந்து வெளியேறும் துர்நாற்றத்தால் வீதியில் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே சாவகச்சேரி நகர சபை இது தொடர்பில் கண்காணித்து கழிவுகளை வீசுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டனர். (ப-9)

## 403 பேர் கைது



கொழும்பு,ஜூலை 2

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினமும் 403 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் இதுவரை 45 ஆயிரத்து 935 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறி, மேல் மாகாணத்துக்குள் நுழைய முயற்சித்த 59 வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஒ.4)

## நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அபிவிருத்தியை நிறுத்தோம்


### *அரச தரப்பு அறிவிப்பு*

கொழும்பு, ஜூலை 2

அரசுக்கு எத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டாலும், நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிறுத்தப்போவ தில்லை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 5 வருடங்களில் நாட்டில் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கடந்த அரசு எதனையும் செய்யவில்லை. அதனால் இலங்கை வளர்ச்சிப் பாதையில் பின்நோக்கிச் சென்றது. இவ்வாறான நிலையிலேயே நாம் நாட்டைப் பொறுப்பேற்று, கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் நாட்டை முன்நோக்கிக் கொண்டுசெல்கின்றோம்.

ஆனால் எதிர்க்கட்சி, அரசின் பணிகளை இல்லாதொழிப்பதற்கே முயற்சிக்கின்றது. ஆனாலும் ஜனாதிபதி, பிரதமரின் தலைமையில் நாட்டை முன்நோக்கிக்கொண்டுச்செல்லும்



எந்தவொருப் பணிகளும் இடைநிறுத்தப்படாது - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் குடியுரிமையுடனேயே பஸில் சபைக்கு வருகின்றார்!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 2**

**இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். எனினும், இரட்டைக் குடியுரிமையுடைய பஸில் நாடாளுமன்றம் வரவுள்ளார். அப்படியானால் இவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.**

பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை தொடர்பில், எதிர்க்கட்சி உறுப்பினரான சமிந்த விஜேசிறி மேலும் தெரிவிக்கையில்,

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கான சக்திவாய்ந்த பிரமுகரே பஸில் ராஜபக்சவென்று பரப்புரை முன்னெடுத்து, நாடக மாடி அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கி, அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான முயற்சியில் ஆளுங்கட்சி ஈடுபட்டு வருகின்றது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கும், அரச கட்டமைப்பில் உயர் பதவிகளை வகிப்பதற்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கடந்த காலங்களில் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

தற்போது இரட்டைக் குடியுரிமையுடைய பஸில் நாடாளுமன்றம் வந்து அமரப்போகின்றார். எனவே, மேற்படி மூவரும் எவ்வாறான அரசியல் முடிவை எடுக்கப்போகின்றனர் என்பது தொடர்பில் அறிய நாமும், நாட்டு மக்களும் ஆர்வமாக உள்ளோம் - என்றார்.

இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கும், அரச சேவைகளில் உயர்பதவிகளை வகிப்பதற்கும் விமல் மற்றும் கம்மன்பில தரப்பினர் 20 ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்ட போது கடும் அழுத்தங்களைப் பிரயோகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ.4,44)

முல்லைத்தீவு

# நகர சந்தைகளில் கடலுணவுகளை விற்றால் சபைக்கு அதிக வருமானம்

### கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜூலை 2

முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள சந்தையில், மீன் உள்ளிட்ட கடலுணவுகளை வியாபாரம் செய்வதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்தினால், பிரதேச சபையால் பெரியளவில் வருமானம் ஈட்ட முடியும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு நகரத்தில் ஒரு முறையான மீன் சந்தை இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சேர வேண்டிய வருமானத்தைத் தனிநபர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனினும் இதனால் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு எந்த வருமானமும் கிடைப்பதில்லை.

இவ்வாறு முல்லைத்தீவிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் கடலுணவுகளுக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை வரி அறவீடுகளைச் செய்யவேண்டும்.

இதற்காக முல்லைத்தீவு நகர சந்தையில், மீன் உள்ளிட்ட கடலுணவுகளை வியாபாரம் செய்யக்கூடிய வகையிலான ஏற்பாடுகளை கரைதுறைப்பற்று பிரதேச சபை விரைவில் முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

(ஐ-246)

# வவுனியாவில் 30 பேருக்கு கொரோனாத் தொற்று



வவுனியா, ஜூலை 2

வவுனியாவில் 30 பேருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

இதில் தவசிகுளத்தில் பத்து பேருக்கும், நெடுங்கேணியில் ஒருவருக்கும், பூந்தோட்டத்தில் இருவருக்கும், பெரியார்குளத்தில் இருவருக்கும், திரு நாவற்குளத்தில் மூவருக்கும், கற்குளத்தில் ஒருவருக்கும், சிதம்பரத்தில் ஒருவருக்கும், ஆச்சிபுரத்தில் இருவருக்கும், மாமடுவில் மூன்று பேருக்கும், அலகல்லவில் ஒருவருக்கும், பெரியஉளுக்குளத்தில் ஒருவருக்கும், இறம்பைக்குளத்தில் ஒருவருக்கும் மற்றும் பொலிஸார் இருவருக்கும் என 30 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-18)



# குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான குருதிக்கொடை முகாம் நேற்றுக் காலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

தற்போது நாட்டில் நிலவுகின்ற குருதித் தட்டுப்பாட்டை பூர்த்திசெய்யும் முகமாக எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு குருதிக்கொடை முகாம் நடைபெற்றுவருகிறது.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான குருதிக்கொடை முகாம் நேற்று நடைபெற்றது.

இலங்கை பொதுப் பயன்பாடு ஆணைக்குழு, யாழ். மாவட்ட மின்னியலாளர்கள் மற்றும் லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்தும் குருதிக்கொடை முகாமை ஏற்பாடு செய்துள்ளன என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் சி.ஜெயசூரியன் தெரிவித்துள்ளார். நிகழ்வில் மின்னியலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்கினர்.

(ஐ-26)

# ஒரே தடவையில் இரண்டு 'டோஸ்'

### தடுப்பூசி செலுத்தலில் மற்றொரு முறைகேடு

கொழும்பு, ஜூலை 2

சைனோஃபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறச்சென்ற பெண் ஒருவருக்கு, ஒரே நேரத்தில் இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

மாகும்புர பன்னிபிட்டியவில் உள்ள விஜயகோஷ கல்லூரியில் கடந்த 16 ஆம் திகதி, இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ள குறித்த பெண் சென்றிருந்தார். அதன்போது தனக்கு இரண்டு முறை தவறுதலாக ஊசி போடப்பட்டது என்று அந்தப் பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

"நான் வீட்டுக்கு வந்த நேரத்தில் இருந்து என்னால் சரியாக இருக்க முடியவில்லை. உடல் முழுதும் ஒரு வகையான வேதனை உள்ளது. மூன்று அல்லது நான்கு நாள்களாகவே கைகள், கால்கள் உணர்ச்சியற்று இருக்கின்றன. என்னால் நிற்க முடியவில்லை, என்னால் எழுந்து நிற்க முடியவில்லை, சுமார் 4 நாள்கள் தொடர்ந்து தூங்கினேன். குறைந்தது 5 நிமிடங்களுக்கு எதையும் கையில் வைத்திருக்க முடியாது." என்று பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில்,

"நாங்கள் தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திடம் விசாரணை செய்தபோது, சைனோஃபோர்ம் தடுப்பூசி அதிக அளவில் உடலில் இருந்தாலும், ஏதேனும் சிக்கல்களை ஏற்படுத்தும் சாத்தியம் இல்லை என்று தெரிந்தனர்." - என்றார்.

(ஒ-4)

# மாகாணக் கட்டுப்பாடு தொடர்ந்தும் இறுக்கம்

கொழும்பு, ஜூலை 2

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மாகாண எல்லைகளைக் கடக்க முயற்சிக்கும் வாகனங்கள் தொடர்ந்தும் திருப்பி அனுப்பப்படுகின்றன.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு மட்டுமே மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் மாகாணங்களுக்கு இடையிலான தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். அவ்வாறு பயணிப்போர் மீது கடுமையான நடவடிக்கை



எடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தடுப்பூசிகளுக்கு தமிழகத்தில் தட்டுப்பாடு!

**சென்னை, ஜூலை 2**

**தமிழகம் முழுவதும் கடந்த 3 நாள்களாக தடுப்பூசி தட்டுப்பாடு நிலவுகின்றது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பின்னர் ஏமாற்றமடைந்தமையால் பல இடங்களில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

45 மையங்கள் மற்றும் 19 நகர்ப்புற சுகாதார மையங்களில் போடப்பட்டு வந்த தடுப்பூசி , தற்போது தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி இருப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்துக்கு மத்திய அரசிடம் இருந்து இதுவரை ஒரு கோடியே 46 இலட்சத்து 39 ஆயிரத்து 940 தடுப்பூசிகள் வழங்கப்பட்டது. இதில் ஒரு கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரத்து 494 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை தாக்கத்துக்கு பிறகு தடுப்பூசி போடுவதற்கு பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளதால் மக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்வந்திருந்தனர். (எ-இ)



# 96 நாடுகளில் டெல்டா வைரஸ்

லண்டன், ஜூலை 2

இந்தியாவில் உருமாற்றம் அடைந்த டெல்டா கொரோனா வைரஸ் உலகின் 96 நாடுகளில் பரவியுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த வைரஸ் கடந்த வாரம் 11 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் உருமாற்றமடைந்த கொரோனா வைரஸ் திரிபு இந்தியாவில் கண்டறியப்பட்டது. இந்த உருமாற்றமடைந்த கொரோனா வைரஸ் உலகின் 96 நாடுகளில் தற்போது பரவியுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேபோல் பிரிட்டன், தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் பரவி பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக உலக சுகாதார நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

உருமாறிய டெல்டா, "இரட்டை விகாரி " என்றும் அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது இரண்டு பிறழ்வுகளைக் கொண்டுள்ளது, இது உருமாறிய அல்பா வைரஸை விட 55 சதவீதம் அதிகமாக பரவக்கூடியது (ஆரம்பத்தில் பிரித்தானியாவில் கண்டறியப்பட்டது) மற்றும் இது உலகளவில் கொரோனா வைரஸின் ஆதிக்கம் செலுத்தும் விகாரமாக மாறும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

டெல்ரா வைரஸ் தற்போது பரவியுள்ள 11 நாடுகளில் துனிசியா, மொசாம்பிக், உகாண்டா, நைஜீரியா மற்றும் மலாவி ஆகிய நாடுகளில் புதிய திரிபின் தீவிர பரவல் இருப்பதாக ஆபிரிக்கா தெரிவித்துள்ளது.

தரவுகளின் படி ஆபிரிக்க கண்டத்தில் தொற்றாளர்களும், உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.

மேலும், ஸ்கொட்லாந்து நாட்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், உருமாறிய டெல்டா கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை மருத்துவமனையில் அனுமதிக்கும் விகிதம் உருமாறிய அல்பா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களை விட 85 சதவீதம் அதிகம் என கண்டறியப்பட்டுள்ளதாக சர்வதேச மருத்துவ இதழான லான்செட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெல்டா வைரஸ் பரவல் காரணமாக ஆஸ்திரேலியாவில் சில நகரங்கள் முடக்கப்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவில் ஜூன் 27 முதல் இரண்டு வாரங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று தன்மையைக் கருத்தில் கொண்டு, எல்லை தாண்டிய பயணக் கட்டுப்பாடுகள் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. (எ-இ)

# ஒடுக்க நினைத்தால் தலைகள் நசுங்கும்!

*சீனா எச்சரிக்கை*

பெய்ஜிங், ஜூலை 2

எவரேனும் சீனாவை ஒடுக்க நினைத்தால் அல்லது செல்வாக்கு செலுத்த நினைத்தால், அவர்களின் தலை நசுக்கப்படும் என அந்நாட்டு ஜனாதிபதி ஸீ ஜிங்பிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 ஆவது ஆண்டு விழா பெய்ஜிங் நகரில் கோலாகலமாக நடைபெற்றது. இந்நூற்றாண்டு ஆண்டு விழாவை முன்னிட்டு பெய்ஜிங்கில் பிரமாண்ட விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் விமானங்களின் சாகச நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. சுமார் 70 ஆயிரம் பேர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் என்று அந்த நாட்டு



ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் முகக்கவசம் அணிந்திருக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.


1921 ஆம் ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. நீண்ட உள்நாட்டுப் போருக்குப் பின்னர், கடந்த 72 ஆண்டுகளுக்கு முன் அந்தக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. அதே வேளை, சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு, 100 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு ஆவணப்படம் ஒன்றை சீனா உருவாக்கியுள்ளது.

கடந்த 100 ஆண்டுகளில் சீனா அடைந்த வளர்ச்சியையும் அதன் வரலாற்றையும் விபரிக்கும் வகையில் குறித்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் 2,500 நிமிடங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள '1921' எனும் ஆவணப்படத்தை 100 அத்தியாயங்களாக வெளியிட சீனா திட்டமிட்டுள்ளது. (எ-இ)

# ஸ்புட்னிக் சோதனைக்கு இந்திய மத்திய அரசு தடை

ஸ்புட்னிக் லைட் கொரோனா தடுப்பூசிக்கான 3 ஆம் கட்ட சோதனை நடவடிக்கைக்கான அனுமதியை வழங்க மத்திய அரசு மறுத்துள்ளது.

ஒருமுறை மட்டுமே செலுத்தும் ஸ்புட்னிக் லைட் தடுப்பூசிக்கான மூன்றாம் கட்ட பரிசோதனையை இந்தியாவில் டொக்டர் ரெட்டீஸ் நிறுவனம் மேற்கொள்ள இருந்தது. எனினும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ஏற்கனவே இரண்டு முறை செலுத்தப்படும் கோவிஷீல்டு, கோவெக்சின் மற்றும் ஸ்புட்னிக் வி உள்ளிட் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில், ஒரு சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவின் மொடர்னா தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

# கரிகணன்

வடக்கின் அச்சகதாரர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்
## விண்ணப்பம் கோரல் - வெளிவாரி
## பதவி – எழுதுநர் 302/13

01. **சம்பள அளவுத்திட்டம் : -**
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 04/2018 சுற்று நிருபத்திற்கமைய 302/13 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்,
16365-140x10-150x10-19265
196380-1680x10-1800x231180
**இதர படிகள் , விசேட படிகளும் வழங்கப்படும்.**

02. **வயதெல்லை** :- 18 – 45 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

03. **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : -**
அ). கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 15 வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்
அல்லது
ஆ). கூட்டுறவு ஊழியர் சாதாரண தரா தரப் பத்திரம் / க.பொ.த சாதாரண தரம்/ தே. க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் / வர்த்தக எண் கணிதம் / தூய கணிதம்/ கணிதம் உடன் சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கி 05 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் இலிகிதர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்.
**விண்ணப்ப முடிவுத் திகதி : -** 2021.07.16

04. **விண்ணப்பிக்கும் முறை : -**
மேற்படி பதவிக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப் படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "**எழுதுநர் 302/13 பதவிக்கான விண்ணப்பம்**" எனக்குறிப்பிட்டு "**தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறச் சங்கம் (வ-து), இல. 127, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**" என்னும் முகவரிக்கு **2021.07.16** திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).**

---

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## VACANCY ANOUNCEMENT FOR THE POSITION OF GIS OFFICER

The HALO Trust is a non-political and non-religious registered British charity, which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

HALO is seeking talented and hardworking candidates for the role of the GIS (Geographic Information Systems) Officer will be responsible for HALO Sri Lanka's GIS and mapping. He/she will work with the ArcGIS Desktop, ArcGIS Enterprise and Google Earth. He/she will be responsible for the quality of the programmes geographic data and produce maps and reports, as well mentor staff members in GIS mapping and analysis. The GIS Officer will also participate in HALO's information management, database and survey activities. He/she will also work with ArcGIS Enterprise and PostgreSQL database and support to the National Mine Action Centre (NMAC) with GIS mapping, data quality and reporting. The GIS Officer will report to the Survey and GIS Manager and work alongside the rest of the GIS team.

He/she will lead by example and support other staff in the programme. As a member of HALO staff, he/she will work closely with others and provide an example of HALO's good working practice, always working hard to ensure that the job is done.

All applications must be submitted on or before 15th July 2021. Only successful candidates will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds.

**Qualifications and Experience**

- GIS experience required
- Advanced ArcGIS Desktop experience required
- Experience with software (ArcMap, ArcGIS Pro, ArcGIS Online, ArcGIS Server, Portal for ArcGIS, ArcGIS Enterprise, Survey123, Google Earth, SQL, QGIS etc.)
- Basic understanding of remote sensing considered an asset
- Sri Lankan national
- Degree or Diploma in GIS, Geography, Engineering, IT or related field
- Fluency in Tamil and/or Singhalese and English

Interested candidates must submit their CV with name and contact details to the below address or e-mail. In addition, please provide details of a minimum of two references. A reference check will be part of the selection process.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

---

# வரலாறு காணாத வெப்பம் கனடாவில் 400 பேர் இறப்பு

ஒட்டாவா, ஜுலை 2




கனடாவில் தற்போது வீசிவரும் வெப்பக்காற்று மற்றும் வெப்ப நிலை காரணமாக கடந்த 5 நாள்களில் 400 பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் அண்மைய நாள்களாக கடும் வெப்பம் நிலவி வலுக்கின்றது. உச்ச பட்சமாக 49.5 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை அங்கு பதிவாகியுள்ளது. இந்த வெப்பத்தாலும் அவ்வப்போது வீசும் வெப்பக்காற்றாலும் கடந்த 5 நாள்களில் அங்கு சுமார் 400 பேர் உயிரிழந்துள்ளனர். வெப்பத்தைச் சமாளிக்கும் விதமாக வீதிகளிலும் பொது இடங்களிலும் தண்ணீர் விசிறிகள் வைக்கப்பட்டுள்ளன. (ம)

---

## நாஹா மருத்துவ நிலையம்

கை. கால் செயலிழப்பு. பாரிசவாதம்.
முழங்கால் பாதிப்பு. தீராத புண்கள். அல்சர்.
இதய நோயும் பிறசரும் சிறப்பு சிகிச்சை

077 321 2740

வங்கி முன்லேன்,
சாந்தாவத்தை வயிரவர் கோயிலடி.(ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

---

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் மூன்று மாடிகள். நான்கு அறைகள் தனியார் பாவனைக்கும். நிறுவனங்களின் பாவனைக்கும்.

077656 9929, 077 505 3654

---

## DEWMAS JOB BANK

வேலையாட்கள் தேவையா? 074 138 3368
யாழ் வேலை வாய்ப்புகளுக்கு dewmasweb.com
51, Amman Road, Nallur

---

# பதவி வெற்றிடங்கள்

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

அரச அங்கீகாரம் பெற்ற (பாதுகாப்பு அமைச்சின்) முன்னணி தனியார் பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக யாழ்ப்பாணத்தில் கடைமைபுரிவதற்கு ஆண் பணியாளர்கள் தேவை.

* கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான தகைமைகள் :-
  i. க.பொ.த (சா.த)
  ii. உயரம் - 5' 4"
  iii. மார்பு - 32"
* விசேட தகைமைகள் :-
  சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* 23 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரவேற்கத்தக்கது :-

**பொதுவான விபரம்**

1. நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்கும் சகலரும் கிராம அலுவலரின் நற்சான்று பத்திரம்.
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
3. கல்வித் தராதரப் பத்திரம்.
4. தே.அ.அ பிரதி ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்விற்கு 3,4ம் திகதிகளில் நேர்முகத்தேர்வு நடைபெறும்

09.00am - 12.00pm வரை நேரில் சமூகம் தரவும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் முகவரி**

JGuest,
146 புங்கன்குளம் சந்தி (கொமர்சல் வங்கி ATM முன்பாக உள்ள வீதி),
அரியாலை,
யாழ்ப்பாணம்.

---

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்
## விண்ணப்பம் கோரல் - வெளிவாரி
## பதவி – கிளைமுகாமையாளர் 208/13

01. **சம்பள அளவுத்திட்டம் : -**
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 04/2018 சுற்று நிருபத்திற்கமைய 208/13 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்,
16365-140x10-150x10-19265
196380-1680x10-1800x231180
**இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.**

02. **வயதெல்லை** :- 18 – 45 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

03. **அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : -**
அ). கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத்திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 15 வது சம்பளத்திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ). கூட்டுறவு ஊழியர் சாதாரணதரப் பத்திரம் / க.பொ.த சாதாரண தரம் /தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் / வர்த்தக எண் கணிதம் / தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கி 04 திறமைச்சித்திகளுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் கிளை நிலையம் ஒன்றின் நிர்வாகம் தொடர்பான பதவியில் ஆகக்குறைந்ததது 02 ஆண்டு கால அனுபவம்.
**விண்ணப்ப முடிவுத் திகதி : -** 2021.07.16

04. **விண்ணப்பிக்கும் முறை : -**
மேற்படி பதவிக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப் படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "**கிளை முகாமையாளர் 208/13 பதவிக்கான விண்ணப்பம்**" என்க்குறிப்பிட்டு "**தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறச் சங்கம் (வ-து), இல. 127, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**" என்னும் முகவரிக்கு **2021.07.16** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய் சொல்லாதே

அது ஒரு அழகிய கிராமம். அங்கு முத்து என்ற விவசாயி தன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தான். முத்து தினமும் தன்னுடைய ஆடுகளை அருகில் உள்ள காட்டுக்கு கூட்டிச்சென்று மேய்ப்பது வழக்கம். காலையில் சென்றால் அவன் மாலையில் வீடு திரும்புவான்.

ஒரு நாள் முத்து தன்னுடைய சொந்த வேலையின் காரணமாக பக்கத்து ஊருக்கு செல்லவேண்டி இருந்தது. இதனால் ஆடுகளை மேய்க்கும் பொறுப்பை தன்னுடைய மகன் ராமுவிடம் கொடுக்கலாம் என நினைத்தார். முத்துவுக்கு ஒரு பயமும் இருந்தது. ராமு ஒரு விளையாட்டுப் பையன். எந்த ஒரு வேலையையும் சரியாக செய்யமாட்டான். வேறு வழியில்லாமல் அவனிடமே முத்து ஆடுகளை மேய்க்கும் வேலையைக் கொடுத்து முத்து பக்கத்து ஊருக்கு புறப்பட்டார். அடுத்த நாள் காலையில் ராமு ஆடுகளை பக்கத்தில் உள்ள காட்டுக்கு ஓட்டிச்சென்றான்.

காட்டை அடைந்ததும் ஆடுகள் புற்களை மேயத் தொடங்கின. ராமு அருகில் உள்ள ஒரு பாறையின் மேல் அமர்ந்தான். அவனுக்கு வேலை பார்த்து பழக்கம் இல்லை என்பதால் பொழுது போகவில்லை. தூரத்தில் ஒரு சிலர் வயல் வேலை செய்துகொண்டு இருந்தனர். வேலை செய்பவர்களின் கவனத்தை ஈர்க்க எண்ணிய ராமு திடீரென " புலி வருது, புலி வருது", என்று கூச்சலிட்டான்.

ராமுவின் அலறலை கேட்டு வயலில் வேலை செய்துகொண்டிருந்த அனைவரும் புலியை விரட்ட கைகளில் கட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு ராமு இருக்கும் இடத்தை நோக்கி விரைவாக வந்தனர்.

வந்தவர்கள் அனைவரும் "புலி எங்கே?" என்று ராமுவிடம் கேட்டனர். அனால் ராமுவோ, "புலி வரவில்லை, நான் பொய் சொன்னேன்", என்று கூறினான். இதனால் கோபமடைந்த அவர்கள் ராமுவை திட்டி விட்டு சென்றனர். ராமுவோ அவர்களை ஏமாற்றியதை நினைத்து மகிழ்ச்சி அடைந்தான். ராமு ஆடுகளை கூட்டிக்கொண்டு வீட்டை நோக்கி சென்றான். அடுத்த நாளும் ராமு புலி வருது என்று கூச்சலிட்டு வேலை செய்துகொண்டு இருந்தவர்களை ஏமாற்றினான். மூன்றாவது நாள் ராமு ஆடுகளை மேய்க்க விட்டு அதே பாறையின் மேல் அமர்ந்தான். சிறிது நேரம் கழித்து சற்றுத் தொலைவில் ஒரு புலி வருவதைப் பார்த்தான். உடனே பாறையின் பின்னால் ஒளிந்துகொண்டு, உண்மையிலே "புலி வருது, புலி வருது" என்று கூச்சலிட்டான்.

ராமு அலறலைக் கேட்ட அனைவரும் அவன் இன்றும் பொய் தான் சொல்வான் என்று நினைத்து யாரும் உதவிக்கு வரவில்லை. அவர்கள் தங்களின் வேலையை தொடர்ந்தனர்.

பாய்ந்து வந்த புலி ஒரு ஆட்டை தூக்கிக்கொண்டு சென்றது.

நான் உண்மையைக் கூறிய பொழுது யாரும் உதவிக்கு வரவில்லையே என்று வருந்திக்கொண்டு மீதி இருக்கும் ஆடுகளை கூட்டிக்கொண்டு தன் இல்லம் நோக்கிச் சென்றான்.

**நீதி: ஒருவன் வார்த்தையில் உண்மை இல்லை என தெரிந்தால் அவன் எப்போது உண்மை சொன்னாலும் அதை யாரும் உண்மை என நம்பமாட்டார்கள்.**

## விலங்குகளின் ஆயுட்காலம்

யானை



150 வருடங்கள்

மாடு



25 வருடங்கள்

குதிரை



35 வருடங்கள்

ஆடு



10 வருடங்கள்

கோழி




09 வருடங்கள்

சிங்கம்



29 வருடங்கள்

## 5 வித்தியாசங்கள் கண்டுபிடிப்போம்



# கிரெட்டா துன்பர்க்



பருவநிலை மாற்றத்துக்கு எதிரான இளம் போராளி ஸ்வீடனைச் சேர்ந்த கிரெட்டா துன்பர்க். அவருடைய நாட்டைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2020ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு கிரெட்டாவின் பெயரைப் பரிந்துரைத்தார்கள்.

அத்துடன் போர்த்துக்கீச நாட்டின் மனிதநேயத்துக்கான குல்பெண்கியன் (Gulbenkian) பரிசை கிரெட்டா பெற்றார். அந்தப் பரிசின் மூலம் கிடைத்த ஒரு மில்லியன் யூரோ பரிசுத் தொகையைப் பருவநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராடும் தொண்டு அமைப்புகளுக்கு நன்கொடையாக வழங்கினார்.

முன்னதாக, 'டைம்' இதழின் 2019ம் ஆண்டின் சிறந்த நபர் என்கிற கௌரவத்தையும் குழந்தைகளுக்கான சர்வதேச அமைதிப் பரிசையும்(2019) அவர் பெற்றிருந்தார்.

# பொது அறிவு



1. காந்தத் தன்மையற்ற பொருள் - கண்ணாடி
2. இரும்பின் தாது - மாக்னடைட்
3. பதங்கமாகும் பொருள் - கற்பூரம்
4. அணா கடிகாரத்தில் பயன்படும் உலோகம் - ஈீசியம்
5. அறைவெப்ப நிலையில் தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளாதது - கிரிக்கெட் மட்டை
6. நீரில் கரையாத பொருள் - கந்தகம்
7. நாம் பருகும் சோடா நீரில் உள்ள வாயு - கார்பன் டை ஆக்சைடு
8. நீரில் கரையாத வாயு எது - நைட்ரஜன்
9. பனிக்கட்டி நீராக மாறும் நிகழ்ச்சி - உருகுதல்
10. நீரில் சிறிதளவே கரையும் பொருள் -ஸ்டார்ச் மாவு

## மீனே...

ஆற்றில் குளத்தில்
அலை நடுவே
அழகாய் நீந்தும்
மீனைப் பார்!


போற்றித் தொழுகிற
கோயில் குளத்தில்
பொத்தென குதிக்கிற
அழகைப் பார்!
சேற்றில் மலர்ந்த
தாமரைப் போல

செக்கச் சிவந்த
நிறத்தைப் பார்!

கப்பல் போல நீந்தும்
அழகினை
கண்கள் நிறைய
பருகிப் பார்!
எப்பொழுதும் நீ
சுறுசுறுப்போடு
மீனைப் போல
மாறிப் பார்!



## எண்களை வரிசையாக இணைத்து படம் வரைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலாலி மக்களுடைய காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம் பலாலி பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் விவசாய பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய்களை உள்ளூர் சந்தைகளில் விநியோகித்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின்வழிகாட்டலுக்கு அமைய 'துரு மித்துரு நவ ரட்டக்' திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை இலக்காக கொண்டு மிளகாய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோம் என்று இராணுவத்தினர் மேலும் தெரிவித்தனர்.



யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தை சூழவுள்ள பொது மக்களின் பெருமளவான நிலப் பரப்பினை இராணுவத்தினர் கையகப்படுத்தி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சுமார் 32 வருட காலங்களுக்கு இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்கள், உறவினர் வீடுகள், வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர்.

அவர்கள் தம்மை சொந்த இடங்களில் மீள் குடியேற்றுமாறு கோரி கடந்த 11 வருடங்களுக்கு மேலாக போராட்டங்களை நடத்தி வருகின்ற நிலையில் பொதுமக்களின் காணிகளை, தேசிய பாதுகாப்பு என கூறி, இராணுவத்தினர் கையகப்படுத்தி அதனை உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி வைத்துள்ளனர். குறித்த காணியில் இராணுவத்தினர் விவசாய பண்ணைகள், கால்நடை பண்ணைகள் என்பவற்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கிழக்கில் இழுத்து மூடப்பட்ட ச.தொ.ச கிளைகளை மீளவும் திறக்கவேண்டும்

## நிந்தவூர் பிரதேச சபையில் தீர்மானம்

அம்பாறை, ஜூலை 2

கடந்த நல்லாட்சிக் காலத்திலும் அதற்கு முன்னரான காலப்பகுதியிலும் கிழக்கின் பல பாகங்களிலும்இயங்கிவந்து இன்றைய பொது ஜனபெமுன அரசு ஆட்சிக்கு வந்ததும் மூடப்பட்ட லங்கா ச.தொ.ச. கிளைகளை மக்கள் நலன்கருதி மீளவும் திறந்து செயற்படவைக்க ஆவன செய்ய வேண்டும் என்று நிந்தவூர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் ஏகமனதான தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டது. நிந்தவூர் பிரதேச சபையின் 39 ஆவது அமர்வு தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர் தலைமையில், சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வின் போது மேற்படி தீர்மானம் தொடர்பான பிரேரணையை சபை உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல்.றியாஸ் ஆதம் சபையில் முன்மொழிந்தார். இது தொடர்பில் அவர் உரையாற்றும் போது; நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் இடர்காலத்திலும், முடக்க நிலைமைகளின் போதும் மக்கள் அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி, நியாய விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு லங்கா ச.தொ.ச கிளைகளின் பங்களிப்பும், சேவைகளும் குறிப்பிடத்தக்கனவாக அமைந்துள்ளன. ஆனால் இன்றைய அரசு ஆட்சிக்கு வந்ததும் கிழக்கில் இயங்கி வந்த பல லங்கா ச.தொ.ச. கிளைகள் இழுத்து மூடப்பட்டுள்ளன. எனவே பாமர மக்களின் நலன் கருதி கிழக்கில் மூடப்பட்ட லங்கா ச.தொ.ச. கிளைகளை மீளவும் திறக்க அரசு தாமதமின்றி ஆவன செய்ய வேண்டும் என்றார். பிரேரணை மீது தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் உரையாற்றுகையில்;

நிந்தவூரில் இயங்கிவந்த லங்கா ச.தொ.ச. கிளைகள் பல வருடங்களுக்கு முன்பிருந்தே மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிவந்தன.

எனவே இழுத்து மூடிய சகல கிளைகளையும் மீளவும் திறந்து மக்களுக்கு சேவையாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும்' என்றார்.

இதனைத் தொடர்ந்து பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (மு-30)

ஊர்க்காவலன்™

**நமக்கு பூஜ்யத்தில் இருக்கும்
நிதானம் நூறில்
இருப்பதில்லை...**

இதயவன்Palm tree

**சிலர் தெரியாது
நடிக்கிறார்கள் சிலர்
தெரியாமல் இருக்கவே
நடிக்கிறார்கள்...!**



## அறிவித்தல்

மாநகர சபை எல்லையினுள் உள்ள பொது வீதிகளில் பொருத்தப்படும் புதிய மின் விளக்குகள் பொருத்துதல் மற்றும் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் திருத்தம் என்பவை மாநகரசபையின் சொந்த நிதியில் செய்யப்படுகின்றது. என்பதனை மாநகர சபை குடியிருப்பாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்**

## அறிவித்தல்

யாழ் மாநகர சபை எல்லையினுள் உள்ள வீதிகளில் பொது மக்களாகிய உங்களால் அபிவிருத்தி நோக்கத்திற்காக வீதிகளில் பறிக்கப்பட்ட கற்கள், மண் மற்றும் இடிபாடுகள் நீண்டகாலமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதுடன் மாநகரத்தின் அழகும் கெட்டுப்போகின்றது.

மாநகரத்தினை சுகாதாரமாக வைத்திருப்பதற்காக பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் வீதிகளில் பொது மக்களாகிய தங்களினால் பறிக்கப்பட்டுள்ள பொருட்களை 01.07.2021 இல் இருந்து ஒரு மாத காலத்தினுள் அகற்றி எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தவறும் பட்சத்தில் மாநகரசபையினால் பொருட்கள் அகற்றப்பட்டு அதற்கு ஏற்படும் செலவுகள் தங்களிடம் இருந்து அறவிடப்படும்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்**

**குறிப்பு :** அபிவிருத்தி நோக்கத்திற்கு வீதியோரத்தில் பறிக்கப்படும் பொருட்கள் அன்றே அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
20
10
1957



**மறைவு**
01
07
2021

**திருமதி சிதம்பரநாதன் கணேஸ்வரி**

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரநாதன் கணேஸ்வரி நேற்று (01.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாகராஜா சீதப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரநாதனின் அன்பு மனைவியும், இந்துஜாவின் பாசமிகு தாயாரும் ஜெயமோகனின் அன்பு மாமியும், கிருஷியாவின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சந்திரரெட்ணம் மகேஸ்வரி, சிவஞானம் கனகராசா, ஜெகநாதன் சிவசோதி, தருமராசா சிவஞானம் மற்றும் சிவராசா சிவஞானம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாலச்சந்திரன் (கனடா), லீலாவதி (கனடா), காலஞ்சென்ற சிவானந்தம் (கனடா) மற்றும் திவ்யநாயகி (ஜேர்மனி), அருணாசலம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2021) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயமணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்**

**தகவல்:
மருமகன், மகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரை....

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வா எனது நெருங்கிய சகா என்ற படியாலேயே அவருக்கு நான் பொதுமன்னிப்பு வழங்கினேன் என்று எதிரணியினர் கூறுகின்றனர். துமிந்தவின் விடுதலையை மூடிமறைப்பதற்காகவே தமிழீழ விடுதலைப்புலிகளின் சந்தேகநபர்கள் (தமிழ் அரசியல் கைதிகள்) 16 பேருக்கு நான் பொதுமன்னிப்பு வழங்கினேன் என்றும் எதிரணியினர் தெரிவிக்கின்றனர். எதிரணியினரின் இந்த இரு குற்றச்சாட்டுக்களையும் நான் அடியோடு நிராகரிக்கின்றேன்.

கொரோனாவின் ஆபத்துக்குள் நாடு சிக்கியுள்ள நிலையில் எமது ஆட்சியைக் குழப்பும் வகையில் எதிரணியினர் பொய்யான தகவல்களை நாட்டு மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர்.

நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி என்ற ரீதியில் எனக்கு இருக்கின்றது. யாருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும், யாருக்கு பொதுமன்னிப்பு வழங்கக்கூடாது என எனக்குத் தெரியும். எனக்கு எவரும் வகுப்பு எடுக்கத் தேவையில்லை. எனது அதிகாரத்தை எவரும் சவாலுக்குட்படுத்தவும் முடியாது.

கடந்த ஆட்சியாளர்கள் செய்யாத கருமங்களை நாம் திறம்படச் செய்து வருகின்றோம். இதை விமர்சிப்பவர்கள் விமர்சிக்கட்டும். எமது பணிகளை நாம் ஓரணியில் நின்று முன்னெடுக்க வேண்டும்' என்றார். (ம-22)

## கொரோனா சாவு...

வல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 120ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 43 பேரில் 27 ஆண்களும், 16 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களே உயிரிழந்துள்ளனர். அதற்கமைய உயிரிழந்த ஆண்களில் 24 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். அதேவேளை, பெண்களில் 13 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## யாழ்ப்பாணத்தில்...

99ஆக உயர்வடைந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நல்லூரைச் சேர்ந்த 57 வயதுடைய ஆணொருவரே நேற்று உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் சுகாதார விதிகளுக்கு அமைய மின்தகனம் செய்யப்பட்டுள்ளது. (ம-26)

## கொரோனா...

கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 60 ஆயிரத்து 904ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 27 ஆயிரத்து 840ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 944ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## புதிய வைரஸ்...

னும் சில மாதங்களில் பேரவல நிலைமை ஏற்படக்கூடும் இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்ததாவது,

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனால் இனம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. ஆனால் தொற்றாளர்கள் வீதம் இலங்கையில் அதிகரித்தே செல்கின்றது. உயிரிழப்பும் அதிகரித்துச் செல்கின்றது. இந்தக் காலகட்டத்தில் புதிய திரிபுகளும் அவதானிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் டெல்டா வைரஸ் அவதானிக்கப்பட்டு 4 மாதங்களின் பின்னரே மோசமான நிலைமை அங்கு ஏற்பட்டது. பெருமளவானோர் உயிரிழந்தனர். இங்கும் டெல்டா வைரஸ் தற்போதுதான் இனம் காணப்பட்டுள்ளது. சில மாதங்களில் இந்தியாவில் ஏற்பட்டதைப்போன்றதொரு பேரவல நிலை இங்கும் ஏற்படலாம்.

எனவே சுகாதார அமைச்சு, பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கையை இலங்கையில் அதிகரிக்கவேண்டும். இதன் ஊடாகவே தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்றார். (ம-ஒ,5)

## அரசின்...

வைரஸ் பரவலைத் தடுக்கும் பணிகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் சாடினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தற்போதைய நிலையில் நாட்டில் தினமும் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில் டெல்டா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

எனவே, டெல்டா வைரஸ் தொற்று தொடர்பில் அனைத்துப் பிரதேசங்களிலும் சரியான தகவலை அரசு வழங்க வேண்டும்.

டெல்டா தொடர்பான முழுமையான தகவல் தெரியாமலேயே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன' என்றார். (ம-22)

## குடாநாட்டில்...

தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலையை செரண்டிப் நிறுவனம் 18 ரூபாவால் அதிகரித்துள்ளது. அதற்கு அமைவாக பாண் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்திருந்தார்.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறிமா நிறுவனத்திடமே அதிகளவானோர் கோதுமை மாவைக் கொள்வனவு செய்வதாகவும் அந்த நிறுவனம் விலை அதிகரிப்பு மேற்கொள்ளாமையால் இங்கு பாண் விலையை அதிகரிக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

## தொழிற்சங்க...

கள் சங்கம் சுகவீன விடுப்புப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ள நிலையில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்ததாவது,

இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

இதனால் இரண்டு நாள்களில் ஒரு லட்சத்துக்கு அதிகமானோருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

தற்போது மிக நெருக்கடியான காலகட்டம். சுகாதார சேவை அத்தியாவசிய சேவையாக உள்ளது. இந்த நிலையில் சில தொழிற்சங்கங்கள் தீர்க்க முடியாத கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை மேற்கொள்கின்றன.

சுகாதார சேவை அவசிய சேவையாக இருக்கும் நிலையில் மக்கள் மீது எந்தக் கரிசனையும் அற்று அவர்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொள்கின்றனர். அவர்களின் போராட்டத்தால் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை, கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கை என்பன பாதிப்படைந்துள்ளன.

மக்கள் மீது கரிசனையற்று அவர்கள் மேற்கொள்ளும் தொழிற்சங்கப் போராட்டங்களின் பின்னால் அரசியல் நோக்கம் இருப்பதாகவே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கருதுகின்றது.

கடந்த காலங்களில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. ஆனால் நோய் நிலைமைகள் தீவிரமடைகின்ற காலங்களில் அதனைச் செய்யவில்லை -என்றார். (ஒ,5)

## சீனா...

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்றுக் கேள்வி எழுப்பியுள்ளார். மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான களப் பயணத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சீன தொடர்பாக எதிர்க்கட்சியினருக்கே அதிக பிரச்சினை இருக்கின்றது. அரசுக்கு எந்த நாடு உதவி செய்தாலும், அதன் மூலம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதே எமது எதிர்பார்ப்பு. மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்துக்கும் சீனா உதவ முன்வந்தால், நாம் அதனையும் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் போது, விமான நிலையத்தின் தேவைப்பாடு அதிகம் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டம் சுற்றுலாத் துறைக்கு பிரசித்தி பெற்ற இடம். சுற்றுலாப் பயணிகள் நீண்ட காலம் தங்கியிருப்பதற்கான சூழலை அமைக்க வேண்டும்.

வடக்கின் வசந்தம், கிழக்கின் வசந்தம் போன்ற திட்டங்களைப் பஸில் ராஜபக்ச முன்னெடுத்தார். பஸில் ராஜபக்ஸ நாடாளுமன்றம் வருவது கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது' என்றார். (ம-22)

## ஊர்காவற்றுறை...

நடத்தப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 9 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடலுணவு பதப்படுத்தும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர்கள் இடையே இந்தத் தொற்று பரவல் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தை முடக்குவதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோர் முன்னெடுத் துள்ளனர்.

அதற்கான கோரிக்கைக் கடிதம் சுகாதார மருத்துவ அதிகாரியினால் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என்று அறிய முடிகிறது. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபா அமெரிக்கா தொடரில் எந்த அணியுடன் எந்த அணி?

பிரேசிலியா, ஜூலை 2

தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கோபா அமெரிக்கா கால்பந்துத் தொடரில் காலிறுதியில் எந்த அணியுடன் எந்த அணி மோதவுள்ளது என்பது தொடர்பான விவரங்கள் வெளியாகியுள்ளன.

நாளை, நாளைமறுதினம் என்று இரு நாள்கள் காலிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. நாளை அதிகாலை 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பெருவை எதிர்த்து பராகுவே மோதவுள்ளது. நாளை காலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிரேசிலை எதிர்த்து சிலி மோதவுள்ளது.

நாளைமறுதினம் அதிகாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உருகுவேயை எதிர்த்து கொலம்பியா மோதவுள்ளது. நாளைமறுதினம் காலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆர்ஜென்ரினாவை எதிர்த்து ஈக்குவடோர் மோதவுள்ளது. காலிறுதியில் பிரேசில் மற்றும் சிலி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. இரு அணிகளும் கடந்த சில வருடங்களாக கோபா அமெரிக்க கிண்ணங்களை மாறிமாறி கைப்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யூரோ கிண்ணத் தொடர்; காலிறுதி இன்று ஆரம்பம்



உரோம், ஜூலை 2

யூரோ கிண்ணத் தொடரின் 'சுற்று 16' முடிவடைந்த நிலையில், காலிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று இரவு 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுவிற்சர்லாந்தை எதிர்த்து ஸ்பெயின் மோதவுள்ளது. இன்று நள்ளிரவு 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பெல்ஜியத்தை எதிர்த்து இத்தாலி மோதவுள்ளது. நாளை இரவு 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செக்குடியரசை எதிர்த்து டென்மார்க் மோதவுள்ளது.

நாளை இரவு 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உக்ரைனை எதிர்த்து இங்கிலாந்து மோதவுள்ளது. இன்று இரவு இடம்பெறும் பெல்ஜியம், இத்தாலி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. பெல்ஜியத்தின் நட்சத்திர வீரர்களான ஈடன் ஹாசார்ட் மற்றும் கெவின் ஆகியோர் உபாதை காரணமாக இன்றைய ஆட்டத்தில் விளையாட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு 075 883 0107

**A/L BIO - CHEM**

வன்னி/கிளி/ யாழ் மாவட்டம்

Home Visits வீடு வரல்

இரசாயனம் : சிங்கம் மாஸ்டர் 076 056 5786

உயிரியல் : நரேன் மாஸ்டர் 077 665 5290

**வீட்டு வேலைக்கு ஆள் தேவை**

இடம் : கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி, உரும்பிராய் வடக்கு

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு 077 476 4817

**வாடகைக்கு தேவை**

யாழ் நகர பகுதியில் உணவகமொன்றிற்கு இடம் (வீடு / கட்டடம்) வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு

077 744 4407

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஒட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)**

தொடர்பு: 077 4683 354. 076 734 1023, 077 064 2661

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)

தொடர்பு:

077 62 34 204, 076 221 2037, 077 2880 152



டெஸ்ட் சம்பியன்ஷிப்

# ஜடேயாவை இணைத்தமை கோலி செய்த பெருந்தவறு

## மஞ்ரேக்கர் மீண்டும் சீண்டல்

**லண்டன், ஜூலை 02**

**உலக் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதி ஆட்டத்துக்கான இந்திய அணியில் ஜடேயாவை இணைத்தமை கோலி செய்த பெரும் தவறு என்று தெரிவித்துள்ளார் சஞ்சய் மஞ்ரேக்கர்.**

பிரபல கிரிக்கெட் விமர்சகரான மஞ்ரேக்கர் ஜடேயாவை இலக்குவைத்து விமர்சனங்களை முன்வைக்கின்றமை இதுவொன்றும் முதல்தடவை அல்ல. ஜடேயா ஒருநாள் ஆட்டங்களுக்குத் தகுதியற்றவர், இந்திய ஆடுகளங்களுக்கு மட்டுமே உகந்தவர் என்ற விமர்சனங்களையெல்லாம் இதுவரை முன்வைத்துள்ளார். அவ்வாறான விமர்சனங்கள் வைக்கப்பட்டால் அடுத்த தொடர்களிலேயே ஜடேயா அவற்றுக்குப் பதிலடி கொடுத்துவிடுவார். தற்போது மீண்டும் டெஸ்ட் சம்பியன்ஷிப் ஆட்டத்தில் ஜடேயாவை இணைத்தமை தவறு என்று சீண்டியுள்ளார் அவர். ஜடேயா கூடுதல் திறமை உள்ளவர். டெஸ்ட் சகலதுறை தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவர். கூடுதல் திறமை உள்ளது என்பதற்காக மட்டும் ஒரு வீரரை தெரிவுசெய்யக்கூடாது. ஆடுகளம் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (ம)

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் புலோமிசை



சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் புலோமிசை நேற்று ( 01.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாச்சிப்பிள்ளை தங்கம்மாவின் மூத்த மகளும், காலஞ் சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவி யும், ரஞ்சினிதேவி, சுசீலாதேவி, ஜெயதேவி, காலஞ்சென்ற லீலாதேவி, சிவானந்தன், யோகானந்தன் (கனடா), மோகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யோகரட்ணம், ஜெயதாசன், சிறிபவன், தயாளினி, சுவர்ணா, துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், நபேஸ் குமார், தாரணி (லண்டன்), கிசோர்க்குமார், காஞ்சனா (பிரான்ஸ்), ரஜித்குமார், மகிபா (பிரான்ஸ்), துஸ்யந்தி, சிறீஸ்கந்தராசா (லண்டன்), சைலஜன், ஜனனி, (சுவிஸ்), துளசிகா, செந்தூரன் (லண்டன்), ரதீபா, அமுதாகரன் (கனடா), ரதீபன், டேவிகா (இலங்கை), செந்தூரன், பிரணவி (பிரான்ஸ்), தர்சனா, பிருந்தாபன் (இலங்கை), சுமனியா (கனடா), சுமாறன் (கனடா), துர்க்கா (சுவிஸ்), சரணியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனிஸ்கா, ரோகித், மிதுன், அபிஷா, அஸ்மிகா, ரித்திகா, மித்திரா, லோகித், பிரித்திகா, அஷீஸ், அனோஜ், அஸ்வின், ரபீனா, அஸ்விதா, ரிஷாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவானந்தன்**
**021 2240 356**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.